# யாழ்ப்பாணம் நூல்நிலைய முன்றலில் 'கலைமகள்' சிலை நிறுவப்படும்

Registered as a News paper in Ceylon    விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்: 46
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 15 முஹறம் 9 வெள்ளிக்கிழமை [28-3-69]



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

எமது வாகனங்களிலும்
மில்க்வைற் தொழிற்சாலை
வாகனங்களிலுமே எமது உற்பத்திப் பொருட்கள் யாவும் விற்பனவு செய்யப்படும்.
போலி விநியோகஸ்தர்களை நம்பி ஏமாறுதீர்கள் என்று அன்புடன் வேண்டுகிறோம்.
அண்ணா
தொழிற்சாலை
இணுவில்.

## மாநகரசபை
## ஏகமனதாக முடிவு

யாழ்ப்பாணம் பொது ஜன நூல் நிலைய முன்றலில் ''யாழ் நங்கை'' சிலைக்குப் பதிலாக ''கலைமகளின்'' சிலையை அமைப்பதென்ற தீர்மானம் நேற்று நடைபெற்ற யாழ்ப்பாண மாநகரசபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. சபைத் தலைவர் திரு. எஸ். நாகராஜா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சபையின் துணை முதல்வர் திரு. ஆ. துரைராஜசிங்கம் இப் பிரேரணையைக் கொண்டு வந்திருந்தார்.

திரு. துரைராஜசிங்கத்தினுல் கொண்டு வரப்பட்ட பிரேரணை பின் வருமாறு:-

யாழ். பொதுஜன நூல் நிலைய முன்றலில் அமைக்கப்பட்டுள்ள ''யாழ். நங்கை'' என்ற சிலைக்கும் நூல் நிலையத்துக்கும் எதுவித தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. நூல் நிலையம் ஒரு கல்வி அறிவுக் களஞ்சியமாகும். ஆகவே கல்விக் கரசி, கலைமகளின், சிலை அங்கு இடம் பெறுவது தான் மிகவும் பொருத்தமானதாகும் இது பற்றி தமிழ் பேசும் மக்கள் பலர் வேண்டுகோள் விடுத்திருந்த போதும், யாழ்ப்பாண முன்னைய மாநகர சபை நிர்வாகம் இதனை நிறைவேற்றவில்லை. எனவே யாழ். நங்கை சிலைக்குப் பதிலாக கலைமகளின் சிலை தான் அங்கு இடம் பெற வேண்டுமெனவும், இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் இச் சபை கோருகிறது.''

இப் பிரேரணையை ஆதரித்து திருவாளர்கள் கே. எஸ். நடராஜா, என். ரி. செல்லத்துரை, திருமதி அந்தோனியா சாமிநாதர், ரி. கே. ராஜரத்தினம், அன்ரனி, ஏ. ரி. போல்ராஜ் ஆகியோரும் பேசினர்கள். திரு. தம்பு கந்தையா பேசுகையில் 'கலைமகள்' சிலை பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்.

நூல் நிலைய முன்றலில் நாவலர், ஞானப்பிரகாசர் சிலை அமைப்பது பற்றி கொண்டு வர முன்னறிவிப்புச் செய்திருந்த பிரேரணைகள் அடுத்த கூட்டத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் சாதியின் பெயரால் அழைக்கப்படும் வீதிகளின் பெயரை மாற்றுவது பற்றி ஆராய திருவாளர்கள் ஆ. துரைராஜசிங்கம், என். ரி. செல்வத்துரை, அ. நடராஜா, கே. சிவசுப்பிரமணியம், கே. எஸ, நடராசா ஏ. ரி. போல்ராஜ் ஆகிய அறுவரைக் கொண்ட குழுவொன்றும் தெரியப்பட்டது.

சுப்பிரமணியம் பூங்கா வாசலில் ''டாக்டர் பி. எஸ். சுப்பிரமணியத்தின்'' சிலை நிறுவ வேண்டுமென திரு. அ. நடராஜாவினுல் கொண்டு வரப்பட்ட பிரேரணை அங்கத்தவர்களால் ஏற்றுக் கொள்ளப் படவில்லை (கா. நி)

# மாதம் 500 ரூபாய் தந்தால் கோவிலைத் திறந்துவிடுவோம்

## அல்வாய் வீரபத்திர ஆலய பிரமுகர் அறிவிப்பு

### ''சாவியையும் ஒப்படைப்போம்''

உடுப்பிட்டி, வியா.

அல்வாய் வடக்கு வீரபத்திரர்கோவிலைச் சிறுபான்மைத் தமிழருக்கு திறந்து விடத் தயாராகவிருப்பதாக கோவிலைச் சேர்ந்த திரு. மயில்வாகனம்நேற்றுத்தெரிவித்தார். கோவில் செலவிற்காக மாதம் 500 ரூபா தருவதற்கு, சிறுபான்மைத் தமிழர் இயக்கங்கள் முன் வந்தால் கோவிலைத் திறந்து விடுவது மட்டுமன்றி, கோவில் சாவியையும், சிறுபான்மையினரிடம் ஒப்படைக்கத் தயாராக இருப்பதாக திரு. மயில்வாகனம் தெரிவித்தார்.

ஒவ்வொருமாதமும்கோவிலுக்கு 500 ரூபா செலவு ஏற்படுகிறதென்றும், இந்தக் கோயில் செலவை ஒவ்வொருமாதமும் கொடுத்தும், ஆலயப் பொறுப்புக்களை ஏற்று நடத்தவும் யாரும் தயாராக இருந்தால் சிறுபான்மை தமிழருக்கு கோவில் திறந்து விடப்படுமென்றும் திரு. மயில்வாகனம் தெரிவித்தார்.

சீனசார்பு கம்யூனிஸ்ட்கட்சியின் ஆதிக்கத்தில் உள்ள தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், புரட்சிவாத சமசமாஜக்கட்சி ஆதிக்கத்தில்உள்ள புரட்சிகர விடுதலை முன்னணி, சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி, சிறுபான்மைத் தமிழர்மகாசபை, முற்போக்கு வாலிப முன்னணி, ஆலயப் பிரவேசத்தை ஆதரிக்கும் வேறு எந்த இயக்கமாவது அல்லது கட்சியாவது மாதம் 500 ரூபா தர சம்மதித்தால் சிறுபான்மைத் தமிழருக்கு கோயிலை திறந்துவிடுவோம் என்று திரு மயில்வாகனம் மேலும் தெரிவித்தார்.

## காணவில்லை எனப் புகார்

அளவெட்டி, வியாழன் மாமியாரைப் பார்க்க வைத்தியசாலைக்குச் சென்ற மருமகள் எங்கோ மறைந்து விட்டாளாம். அவரைக் கண்டுபிடித்துத் தரும்படி மாமனர் பொலிசாரிடம் கேட்டுள்ளார்.

தையிட்டியைச் சேர்ந்த நன்னியன் நடேசன் என்பவர் காங்கேசன்துறைப் பொலிசில் செய்துள்ளமுறைப்பாடொன்றில் தெரிவித்துள்ளதாவது:-

'எனது மனைவி தற்போது சுகவீனம் காரணமாக தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரைப் பார்த்துவிட்டு வருவதாகக்கூறிவிட்டுவைத்தியசாலைக்குச் சென்றஎனது மருமகள் கமலம் கடந்த 4 தினங்களாக வீடு திரும்பவில்லை. அவரைக் கண்டு பிடித்துக் தரும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

## 'ஐக்கியப்படுவதன்மூலமே உரிமைகளைப் பெறலாம்

### டாக்டர் நாகநாதன் கூறுகிறுர்

கோண்டாவில், வியா,

'தமிழ் மக்களாகிய நாம் வருங்காலத்தில் எவ்வளவோ கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். எமது நாட்டைப் பொறுத்தமட்டில் இந்நாடுமுழுவதும் தங்களுக்கே சொந்தமானது என கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்ருர்கள் பெரும்பான்மையினர். இதனுல் இந்நாட்டில் வாழும் சிறுபான்மையின மக்களாகிய தமிழர் இஸ்லாமியர், பறங்கியர் போன்றவர்களின் கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியன நசுக்கப்பட்டுவருகிறது இதற்காகவேதான் நாம் எமது இனத்தைக் காப்பாற்றுவதற்காகவும், ஓர் ஆதிக்கத்துடன் தமிழராகிய நாம் இந்நாட்டில் தலைநிமிர்ந்து வாழவும் மாவட்ட சபை ஆட்சிமன்றத்துக்கு அனுப்பி எமது இழந்த உரிமைகளைப் பெற முயற்சிசெய்யவேண்டும்'.

மேற்கண்டவாறு கோண்டாவில் குமரகோட்ட வாசிகசாலை மண்டபத்தில் நேற்றையதினம் நடந்த இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கோண்டாவில் கிளையின் வருடாந்த கூட்டத்தில் பேசும்பொழுது நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், ''தமிழ் மொழி மசோதாவை அமுல்செய்வதற்கு நடவடிக்கை[illegible] எடுத்துள்ளோம். கூடியவிரைவில் அது நடைமுறைக்குவரும். இழந்த உரிமைகளை பெறுவதற்கு போராடுவதே எமது கட்சியின் இலட்சியம், இதற்

## வேலையில்லா பட்டதாரிகள்

# பிரச்னை தீர்க்காவிட்டால் குழப்பம் ஏற்படலாம்'

கொழும்பு, வியா.

இலங்கையில் வேலையில்லா பட்டதாரிகளின் பிரச்னை மிக விரைவில் தீர்க்கப்படா பட்சத்தில் நாட்டில் பெரும் குழப்பம் ஏற்பட வேண்டிய சூழ்நிலை உருவாகும் என்று இலங்கைக்கு விஜயம் கசய்திருந்த ஐ. நா ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

1963-ம் ஆண்டு புள்ளி விபரப்படி 16,800 பட்டதாரிகள் வெளியேறியுள்ளதாகவும், அவர்களுள் 1080 பேர் வேலையின்றியிருப்பதாகவும் கணிக்கப்பட்டுள்ளது. 1968-ம் ஆண்டு 29,000 பேர் வெளியேறியதாகவும், அவர்களுள் 6,300 பேர் வேலையின்றி யிருப்பதாகவும் புள்ளி விபரம் தெருவிக்கிறது.

வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்னையை உடனடியாகத் தீர்க்க ஆவன செய்யுமாறு இலங்கை அரசாங்கத்துக்கு ஐ. நா ஆலோசனை கூறியுள்ளார்.

# நீர்வேலி கந்தசாமிகோயிலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மட்டுமன்றி, ... நம் தெரிவித்தார். கோவில் சாவியையும், சிறு பான்மையினரிடம் ஒப்ப ... டைக்கத் தயாராக இருப்ப ... தாக திரு. மயில்வாகனம்

சிறுபான்மைத் தமிழருக்கு கோயிலை திறந்துவிடுவோம் என்று திரு மயில்வாகனம் மேலும் தெரிவித்தார்.

# நீர்வேலி கந்தசாமிகோயிலில் ஆலயப்பிரவேசம் நடந்தது

## சிறுபான்மைத் தமிழர் மகாசபைத்தலைவர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் நீர்வேலி கந்தசுவாமி கோவிலுக்குள் இம்மாதம் 26-ந் திகதி சென்று வழிபட்டதாக சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவரும், சிறுபான்மைத்தமிழர் ஐக்கியமுன்னணி செயலாளருமான திரு. எம். சி. சுப்பிரமணியம் தெரிவிக்கிறார். சிறுபான்மைத் தமிழர் மகாசபை, ஐக்கியமுன்னணி ஆகியவற்றின் தலைமையில் இந்த ஆலயப்பிரவேசம் நடந்ததாக அவர் கூறுகிறார்.

அவர் மேலும் தெரிவிப்பதாவது:

உரும்பராய், கோப்பாய், சுன்னுகம், யாழ்ப்பாணம், நீர்வேலி, கரவெட்டி ஆகிய இடங்களைச் சேர்ந்த இந்துசமயத்தைச் சேர்ந்த சிறுபான்மைச் சமூகத்தினர் எனது தலைமையில் கோவிலுக்குள் சென்று வலம் வந்து ஆண்டவனை வழிபட்டனர்.

கந்தசுவாமி கோவில் அமைந்துள்ள நீர்வேலிக் கிராமத்து மக்களின் பரந்த மனப்பான்மையும், காவில் தர்மகர்த்தா சபையினரின் உயர்ந்த பண்பும் எங்கள் உள்ளங்களைத் தொட்டுவிட்டது. நீர்வேலி கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தாக்களின் முன்மாதிரியை ஏனைய ஆலய நிர்வாகிகளும் பின்பற்றவேண்டும்.

### "ஆசாரசீலர்களுக்கு இதுவரைதடையிருக்கவில்லை"

யாழ்ப்பாணம், வெள்ளி "நீர்வேலிக் கந்தசாமி கோவிலில் ஆசார சீலர்களாக சைவ முறைப்படி யாரும் சென்று வணங்குவதற்கு இதுவரை எவரும் தடை செய்யவில்லை. இப்படியாரும் தடை செய்ததாக எவரும் புகார் செய்யவும் இல்லை. இந் நிலையில் நீர்வேலிக் கந்தசாமி கோவிலில் புதிதாக ஆலயப் பிரவேசம் ஒன்று நடந்ததாக சிலர் அறிக்கை வெளியிட்டிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது." என்று நீர்வேலிக் கந்தசாமி கோயில் பரிபாலன சபைத் தலைவர் திரு. பூபாலசிங்கம் நேற்று நமது நிருபரிடம் தெரிவித்தார்.

இதுவரை இருந்த நிலைக்கு முரண்பாடாக எதுவும் நடைபெறவில்லையென்றும் அப்படி நடைபெற்றிருந்தால் ஆலயப் பாதுகாவலரோ தர்மகர்த்தா சபையினரோ ஆலயப் பிரதம குருக்களோ தெரிவித்திருப்பார்களென்றும் அப்படி எதுவும் யாரும் சொல்லவில்லையென்றும் திரு. பூபாலசிங்கம் தெரிவித்தார்.

# சிதம்பராக்கல்லூரி சாரணருக்கே மிகச்சிறந்த பரிசு

## கவர்னர் ஜெனரல் வழங்குவார்

வல்வெட்டித்துறை, வெள்ளி வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி 12-ம் யாழ்ப்பாணம் சாரணர்குழு அகில இலங்கையிலும் 1968-ம் ஆண்டின் மிகச்சிறந்த சாரணர்குழு எனத்தெரிவுசெய்யப்பட்டு சேர் அண்ட்றூ கல்கொட் ஞாபகார்த்த வெற்றி விருதை பெறுவதற்கான தகுதி பெற்றுள்ளது.

இந்த பரிசளிப்பு வைபவம் கொழும்பிலுள்ள இலங்கைசாரணர் சங்க தலைமை அலுவலகத்தில் நடைபெறும்.

கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா இந்தப்பரிசை சிதம்பராக் கல்லூரி சாரணர்களுக்கு வழங்குவார்.

## நன்றி நவிலல்

24. 3. 69-ந் திகதி அன்று நடந்த எமது திருமணத்தின் போது சமூகம் தந்து எம்மை ஆசீர் வதித்து நல்லாசி கூறிய உற்றார் நண்பர்கள் யாபேருக்கும் எமது மனம் கனிந்த நன்றியைக் கூறுகிறேம்.

செ. செல்லையா
யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கம்
யாழ்ப்பாணம்
செ. நவமணி
யாழ் அரசினர் ஆஸ்பத்திரி
1307

## குருத்தோலை ஞாயிறு

பண்டத்தரிப்பு, வெள்ளி இம்மாதம் 30-ந் திகதி சகல கத்தோலிக்க தேவாலயங்களிலும் குருத்தோலை ஞாயிறு கொண்டாடப்படவிருக்கிறது. இதனையொட்டி குருத்தோலை மந்திரிப்பு, குருத்தோலைப் பவனி ஆகிய சடங்குகள் நடைபெறும். இவற்றின் பின் மந்திரித்த குருத்தோலைகளை வீடுகளுக்கு எடுத்துச்செல்வர்.

## நியமனம்

அச்சுவேலி, வியாழன் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையின் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராக திரு. இ. வே. இராமசுவாமி (அச்சுவேலி முன்னுள் கிராமாதிகாரி) சுகாதார அமைச்சரினுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

...வருவதாககூறிவிட்டு வைத்தியசாலைக்குச் சென்றஎனது மருமகள் கமலம் கடந்த 4 தினங்களாக வீடு திரும்பவில்லை. அவரைக் கண்டு பிடித்துத் தரும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.'

—

# தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி நேற்று இழுக்கப்பட்ட 239-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு
21 D 0692 - ரூ. 96,670
2-வது பரிசு
33 G 0036 - ரூ. 36,268
3-வது பரிசு
40 X 0003 - ரூ. 9,067

ரூபா 453,35 சதம்பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 36 D 0884 | 21 Q 0905 |
| 21 D 0164 | 26 U 0672 |
| 18 E 0413 | 04 P 0327 |
| 16 H 0037 | 22 W 0926 |
| 36 V 0289 | 02 S 0660 |
| 36 V 0286 | 10 S 0783 |
| 29 R 0292 | 18 F 0111 |
| 10 J 0509 | 39 F 0272 |
| 01 C 0302 | 38 U 0465 |
| 15 X 0501 | 22 G 0882 |
| 10 S 0076 | 23 T 0178 |
| 13 M 0280 | 17 Q 0117 |
| 37 T 0300 | 19 T 0185 |
| 05 V 0343 | 37 A 0565 |
| 21 E 0598 | 11 Y 0481 |
| 23 W 0365 | 12 U 0296 |
| 26 X 0555 | 40 O 0244 |
| 05 J 0490 | 26 B 0920 |
| 07 R 0327 | 01 T 0541 |
| 37 A 0927 | 13 J 0966 |
| 10 H 0077 | 32 C 0971 |
| 03 J 0568 | 11 O 0519 |
| 24 P 0993 | 02 J 0594 |
| 38 U 0662 | 37 N 0259 |
| 22 P 0440 | 34 M 0043 |
| 32 E 0703 | 11 J 0181 |
| 33 B 0728 | 10 J 0969 |
| 25 V 0808 | 17 G 0379 |
| 67 V 0582 | 12 P 0026 |
| 18 H 0673 | 35 L 0128 |
| 21 S 0911 | 05 L 0037 |
| 13 J 0262 | 26 Y 0759 |
| 33 N 0802 | 07 M 0608 |
| 12 E 0061 | 38 D 0230 |
| 19 S 0885 | 14 F 0970 |
| 18 D 0727 | 16 D 0943 |
| 40 E 0255 | 04 U 0321 |
| 18 A 0596 | 33 G 0761 |
| 13 F 0975 | 32 H 0114 |
| 13 G 0192 | 36 O 0918 |
| 35 E 0133 | 34 G 0016 |
| 03 O 0700 | 40 S 0991 |
| 37 K 0599 | 34 V 0477 |
| 26 V 0899 | 28 S 0920 |
| 05 G 0216 | 23 O 0847 |
| 01 Y 0707 | 06 A 0477 |
| 37 N 0826 | 35 D 0309 |
| 23 B 0326 | 29 C 0012 |
| 09 L 0486 | 40 M 0129 |
| 39 C 0229 | 19 F 0933 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை)

...போன்றவர்களின் கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியன நசுக்கப்பட்டுவருகிறது இதற்காகவேதான் நாம் எமது இனத்தைக் காப்பாற்றுவதற்காகவும், ஓர் ஆதிக்கத்துடன் தமிழராகிய நாம் இந்தநாட்டில் தலைநிமிர்ந்து வாழவும் மாவட்ட சபைகளைக் கொண்டுவர முயற்சித்தோம். அதை மற்றைய தமிழ் கட்சியே கடுமையாக எதிர்த்து அம்மசோதாவை ஆட்சிமன்றத்தில் கொண்டுவராமல் தடுத்துவிட்டது. ஆகையால் தமிழராகிய நாம் அமரர் அண்ணு காட்டிய வழியில், அவரது இலட்சியமாகிய கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன், ஒற்றுமையாக வாழப் பழகிக் கொள்ளவேண்டும். இதற்காக ஒரே கொள்கை, ஒரே இலட்சியம் உள்ளவர்களை ...யில், "தமிழ் மொழி மசோதாவை அமுல்செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். கூடியவிரைவில் அது நடைமுறைக்குவரும். இழந்த உரிமைகளை பெறுவதற்கு போராடுவதே எமது கட்சியின் இலட்சியம், இதற்காக எமது கட்சி போராடுவதற்குத் தயங்காது" என்று குறிப்பிட்டார்.

கிளையின் புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள் தலைவர்: திரு. எஸ். கோபாலசிங்கம், உபதலைவர்: திரு. அ. நவரட்ணம், செயலாளர்: திரு. ச. யோகராசா, பொருளாளர்: திரு. செ. சண்முகநாதன் மற்றும் 15 பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

# சைக்கிள் திருட்டை தடுக்கபுதிய நடவடிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணக் குடாநாட்டில் தினசரிஅதிகரித்துவரும் சைக்கிள் களவை முற்றாக தடைசெய்ய இறுதி நடவடிக்கை ஒன்றைபொலிஸார் எடுக்க முன்வந்துள்ளனர்

எந்தப் பூட்டையும் சைக்கிளுக்குப் பூட்டாமல் சங்கிலிப் பூட்டைமட்டும் போடுமாறு இந்த இறுதி நடவடிக்கையில் பொலிஸார் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

ஒவ்வொருவரும் தான் நிற்கும் இடத்திலிருந்து 100 யார் தூரத்துக்குள்ளேயே தனது சைக்கிளைப் பூட்டிவைக்க வேண்டுமெனவும் இந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த மாதத்திற்குள் மட்டும் இதுவரை மொத்தம் 42 சைக்கிள்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் களவு போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

இவற்றில் 5 சைக்கிள்கள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் களவுபோயுள்ளன

சைக்கிள்களைக் களவாடுபவர்கள் அதன் உதிரிப் பாகங்களைக் கழற்றிவிட்டு மிகுதியை எறிந்துவிடுவதால் சைக்கிள் கள்வர்களைக் கைதுசெய்வதில் பொலிசாருக்குச் சிரமம் ஏற்படுவதாகவும் எனவே சைக்கிள்களுக்கு சங்கிலிப் பூட்டுகளையே போட்டு, அதிகரிக்கும் சைக்கிள் களவைத் தடை-செய்யுமாறும் பொலிசார் தமது வேண்டுகோளில் தெரிவித்துள்ளனர். (கா. நி)

...வேண்டிய சூழ்நிலை உருவாகும் என்று இலங்கைக்கு விஜயம் கசய்திருந்த ஐ. நா ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

1963-ம் ஆண்டு புள்ளி விபரப்படி 16,800 பட்டதாரிகள் வெளியேறியுள்ளதாகவும், அவர்களுள் 1080 ... புள்ளி விபரம் தெருவிக்கிறது.

வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்னையை உடனடியாகத் தீர்க்க ஆவன செய்யுமாறு இலங்கை அரசாங்கத்துக்கு ஐ. நா ஆலோசனை கூறியுள்ளார்.

# கச்சதீவுப் பொருட்கள் திருப்பிக்கொடுக்கப்படுமா?

யாழ்ப்பாணம், வெள்ளி கச்சதீவிலிருந்து திரும்பி வந்தவர்களிடமிருந்து சுங்க இலாவினரால் கைப்பற்றப்பட்ட பொருட்கள் மீண்டும் உரியவர்களிடம் திருப்பிக் கொடுக்கப்படுமா என்பது இன்று தெரிய வரும். இது பற்றி சுங்கஇலாகா அதிகாரிகள் இப்பொழுது ஆலோசித்து வருகின்றார்கள்.

கொழும்பிலுள்ள தலைமை இலாகா அதிகாரிகளுடன் இதுபற்றிக் கலந்தாலோசிக்கச் சென்றிருந்த யாழ்ப்பாணம் சுங்க சப் கலெக்டர் திரு. சேனரத்ந நேற்று திரும்பி வந்தார்.

தங்கள் பொருட்களை கச்சதீவிலிந்து திரும்பி வரும்போது சுங்கப் பகுதியிடம் பறி கொடுத்தவர்கள் தங்கள் பொருட்கள் பற்றிய விபரத்துடன், அதற்கான விளக்கத்தையும் எழுதி அடுத்த மாதம் 14-ந் திகதி வரை சுங்க சப் கலெக்டருக்கு அனுப்பி வைக்கலாம்.

தகுந்த விளக்கம் காட்டுபவர்களது பொருட்கள் திருப்பிக் கொடுக்கப்படலாமெனவும் சுங்க இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (கா. நி)

## வெள்ளாங்குள கொலை வழக்கு

# மூன்ரும் எதிரிக்கு மரணதண்டனை; முதலாம், இரண்டாம் எதிரிகளுக்கு கடூழியம்

யாழ்ப்பாணம், வெள்ளி வெள்ளாங்குள கொலை வழக்கு நேற்று இறுதித்தினமாக விசாரணை செய்யப்பட்டபோது ஜூரிசபையினர் 1 மணி நேர மந்திராலோசனையின் பின் 6-50-க்கு முடிவு தெரிவித்தனர்.

1-ம் எதிரி பலத்த காயம் விளைவித்ததற்கு குற்றவாளி யென ஜூரி சபையினர் ஏகமனதாக தெரிவித்தனர்.

2-ம் எதிரி சிறுகாயம் விளைவித்ததற் குகுற்றவாளியென ஏகமனதாக தெரிவிக்கப்பட்டது.

3-ம் எதிரி கொலைக் குற்றவாளியென 5-2 ஆகப் பிரிந்து ஜூரி சபையினர் தீர்ப்பளித்தனர்.

இதைத் தொடர்ந்து நீதியரசர் இரவு 7 மணிக்கு தீர்ப்புவழங்கினுர்.

3-ம் எதிரிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. 69-ம் ஆண்டு மே மாதம் 7-ம் திகதி புதன்கிழமை மரண தண்டனை நிறைவேற்றப்படுமென நீதியரசர் தெரிவித்தார்

3-ம் எதிரி ஏதாவது காரணம் காட்ட இருக்கிறதா எனக் கேட்ட போது 'நான் இந்தக் கொலையை செய்யவில்லையென' கூறினுர்.

முதலாம் எதிரிக்கு 10 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கும் போது நீதியரசர் கூறியதாவது:-

விழுந்த மனிதன் 'வெட்டாதே வெட்டாதே' என்று கெஞ்சிக் கேட்ட போது கையை வெட்டியுள்ளீர். அந்த மனிதன் மன்னிக்கும்படி கெஞ்சி மன்ருடியிருக்கிருர். ஆகவே உமக்கு 10 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கிறேன்.

2-ம் எதிரிக்கு ஒருவருட கடூழியச் சிறைத்தண்டனையும் ரூபா 500 அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதம் கட்டத் தவறின் மூன்றுமாத கடூழிய சிறைத் தண்டனை என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

தீர்ப்பை அளித்ததும் நீதிமன்றத்திற்கு வெளியே இருந்த பெண்கள் கண்ணீர் விட்டழுதனர்.

இவ்வழக்கில் 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 2-ம் திகதி வெள்ளாங்குளத்தில் ஏரம்பு சோதிலிங்கம், ஏரம்பு கார்த்திகேசு, ஏரம்பு சிதம்பரநாதன் ஆகியோர் சிதம்பரப்பிள்ளை சிவஞானசுந்தரத்தைக் கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

முதலாம் எதிரி சார்பில் அட்வகேட் ஈ பி சத்துருகுலசிங்கம் 2 -ம் எதிரி சார்பில் அட்வகேட் கே. வி, எஸ், சண்முகநாதனும் 3-ம் எதிரி சார்பில் அட்வக்கேட் ரி. தம்பித்துரையும் புறக்டர் ஆர், விஸ்வநாதன் புறக்டர் வி ஏ ஈ பாலசிங்கம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானுர்கள்

எதிரிகளுக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் வி. சண்முகநாதன் நியமிக்கப்பட்டிருந்தார்.

முடிக்குரிய தரப்பில் அட்வகேட் ரஞ்சித் குணதிலகா ஆஜரானுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

நம்பிக்கையான மலையாள மாயாஜால வசீகர பரிகாரத்தைக்கொண்டு, காதல் பிரச்னைகள் 3 நாட்களில் பரிபூரணமாகத் தீர்த்து வைக்கப்படும். இருவர் பெயர்களையும் எழுத இலவச விபரங்களுக்கு எழுதுங்கள். நீலன் கந்தசாமி. குப்தி வித்யாதணய, நிட்டம்புவ. 762

### தேவை

கைத்தறி நெசவில் பயிற்சியுள்ள பெண் நெசவாளர்கள் தேவை. டொபியில் வேலை செய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது. விடுதி வசதியும் உண்டு. விபரங்களுக்கு: சுதாஸ் நெசவு நிலையம், கொலனி வீதி, அச்சுவேலி. 790

ஆசிரியை கொக்குவில் இந்துக்கல்லூரிக்கருகாமையிலுள்ள 'சிறுவர் பாடசாலை'க்கு 2-4-69 க்கு முன் விண்ணப்பிக்கவும். யாழ். இளைஞர் கழகம், 1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 795

### விற்பனைக்கு

முட்டையிடும் ஆர். ஐ. ஆர். (R. I. R,) வயிற்லெகோன் கோழிகள் விற்பனைக்குண்டு. 373/3, நாவலர் ரோட், யாழ்ப்பாணம். 793

### நன்றிநவிலல்

20-3-69-ல் நிகழ்ந்த எனது மகளின் திருமணத்திற்கு நேரில் வருகைதந்தும் வாழ்த்துச்செய்திகள் அனுப்பியும் பரிசில்கள் வழங்கியும் ஆசிர்வதித்த உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மணமகன் கனகரத்தினம், மணமகள் அருள்மலர் சார்பிலும் எனது சார்பிலும் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ரி. இராஜசிங்கம் ராமகிரி, தெல்லிப்பழை. 794

ராஜா 74வது தினம் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
முத்துராமன், ராஜ்ஸ்ரீ நடித்த
அனுபவி ராஜா அனுபவி

## கேள்வி விளம்பரம்

### நீர்வேலி - கிராமசபை

நீர்வேலி ஸ்ரீமன் கத்தோலிக்க பாடசாலை வண்ணைசந்தி வீதி அமைப்பதற்கு 7-4-69-ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிவரை கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

இதற்கான கேள்விப்பத்திரங்கள் 6-4-69-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பின்பு வழங்கப்படமாட்டாது.

கேள்விப்பத்திர கிரயம் ரூபா 10/- செலுத்தி கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும். இப்பணம் எக்காரணம் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

இக் கேள்வி பதிவுத்தபால் மூலம் தலைவருக்கு விலாசமிட்டு அனுப்பப்பட வேண்டும். அதே நேரத்தில் பிரதியொன்று உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப் படவேண்டும்.

கேள்விப்பத்திர பிணைப்பணமாக ரூபா 50/- செலுத்தப்படவேண்டும்.

எக்கேள்விகளையும் ஏற்கவோ அல்லது மறுக்கவோ சபைக்கு அதிகாரம் உண்டு.

மேலதிக விபரம் அறிய விரும்பின் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

இ. அப்பாத்துரை
தலைவர் கி. ச. நீர்வேலி.
24-3-69

1246

## சிகரட் புகையிலை உற்பத்தி

அராலி, வியா.

அராலி வடக்கு செட்டியாமடம் சிகரெட் புகையிலை உற்பத்தியாளர் அறுபது அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. உறுப்புரிமைப் பணம் ஆளுக்கு நூறுரூபா வீதம் ஆறுயிரம் ரூபா திரட்டப்பட்டிருக்கிறது. இவ்வாண்டு இச்சங்கம் 44,292 ரூபா 45 சதம் பெறுமதியான சிகரெட் புகையிலை தயாரித்து விற்பனை செய்துள்ளது.

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் - விஜயலக்ஷ்மி நடித்த
எதிரிகள் ஜாக்கிரதை

ராணி
(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை சங்கீதசபை

# சங்கீதப் பரீட்சை முடிவுகள்

(முன்னைய தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், வியாழன்

வடஇலங்கை சங்கீதசபையினரால் நடாத்தப்பட்ட 1968-ம் வருட சங்கித பரீட்சைகளின் முடிவுவிபரம்.

### ஆசிரியர் பகுதி

### யாழ்ப்பாணம்

சாதாரண பிரிவு

வாய்ப்பாட்டு

கை கலாவதி, த ஞானகுமாரி, சி சந்திரலோஜனி.

### மட்டக்களப்பு

சி புவனேஸ்வரி வீணை

மிருதங்கம்

முதலாம் பகுதி

சாதாரண பிரிவு

ந நவரஞ்சன், வி ஜம்புநாதன், த விமலன், ஈ முகுந்தன் ஐ ஞானசேகரம் கி கணேசலிங்கம், த ஞானசேகரம், அ செந்தில்குமார், ச விக்னராசா, ச லோகேஸ்வரன், சி சிவகாந்தன் பொ. ஞானசேகரம், ச ஞானகுருபரன், க நடராசா, ச மகேந்திரன், மு குணரத்தினம், சி சிதம்பரநாதன், கி சிவகுருநாதன், வே வித்தியானந்தன், மா செந்தில்வாசன், பொ யோகேந்திரன், வே கோபாலகிருஷ்ணராசா, வே கிருஷ்ணராஜ்.

இரண்டாம் பகுதி

சாதாரணபிரிவு மிருதங்கம்:

யோ குகன், யா பாலகிருஷ்ணன், மாணிக்கம்பிள்ளை, ந வாசஸ்பதி தே தபோதநாயகம், இ இராஜேஸ்வரன் கு இராமச்சத்திரன், சி ஆனந்தரட்ண சர்மா க மோகனராஜலிங்கம் ச சிவபாலன், சு கிருபானந்தன், செ குகன், ஸ்ரீ கார்த்திகைகுமரன், த சிவகுமாரன், க அருட்சோதி, சி சிவராசா, நா சோமாஸ்கந்த சர்மா, வி ஈஸ்வரசங்கர்.

மூன்றும் பகுதி

சாராரண பிரிவு மிருதங்கம்

அ ரகுநாதன், ச இராஜேந்திரா, த ரஞ்சிற், சி ரவீந்திரன், ச நாகேஸ்வரன், ப ஆனந்தபிரசாத், மா சிதம்பரநாதன், கா செல்வகுமார், க சேய்ந்தன், சோ சிவராமகிருஷ்ணன்.

நான்காம் பகுதி

சாதாரண பிரிவு மிருதங்கம்

ம ரவிச்சந்திரா ஐ ஜெயமணிதேவி, மு நித்தியானந்த தேவி பொ சுகானந்தா.

ஐந்தாம் பகுதி

சாதாரண பிரிவு மிருதங்கம்

ப சின்னராசா.

முதலாம் பகுதி: சாதாரண பிரிவில் சித்தியடைந்த வயலின், பரீட்சார்த்திகள் விபரம் வருமாறு;-

வயலின்-

ந பூபதி, ந நந்தியாவதி, க விமலராணி, பா கமலாம்பிகை, ந சிவனேஸ்வரி, ந ரஞ்சிதமலர், ம சத்தியபாமா, கா மகாலஷ்சுமி, சி மணிவதனம், இ சாந்தினி வே கௌரிதேவி, இ மீனலோஜினி, த திலகவதி,

வீணை:

க செல்வராணி, க சுருந்தமலர், அ சாந்தினி கோபாபாலினி, சி சாரதாதேவி, தி ராஜினி வை மேகலா யோகினி, ந சுசீலா,

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 28—3—69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 பண்ணுரிந்தமிழ், 8-00 குரான், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12 00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 பஜனை, 6-45 பாவளம், 7-00 கிராம சஞ்சிகை, 7-30 யூனெஸ் கா உரைச்சித்திரம், 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் விருப்பம்.

## இன்றைய பலன்

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

கைதடி இந்து வாலிபர் சங்கத்தின் புது வருட நிர்வாகிகளாகப் பின்

# உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை சாம்பியன்

## கோப்பாய் வட்டார கனிஷ்ட பாடசாலை விளையாட்டு போட்டி முடிவுகள்

உரும்பராய், வியாழன்

கோப்பாய் வட்டாரக்கனிஷ்ட பாடசாலைகளினதும், கனிஷ்ட பிரிவுகளினதும்வருடாந்த விளையாட்டுப் போட்டியில் உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை மிகக்கூடுதலாக 61 புள்ளிகளைப் பெற்று இவ்வருட சாம்பியன்ஆனதோடு, திரு. வ. நடேசலிங்கம்வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை 31 புள்ளிகளைப்பெற்று இரண்டாம் இடத்தையும் ஆவரங்கால் எம். எம். தமிழ்க்கலவன் பாடசாலை 24 புள்ளிகளைப் பெற்று மூன்றும் இடத்தையும் அடைந்தன.

கோப்பாய்வட்டார வித்தியாதிகாரி திரு. வே. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றபரிசளிப்பு விழாவில் அனைவரையும் வரவேற்று ஆசிரியர் திரு. அ. பஞ்சாட்சரம் பேசினார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் திரு. சீ. ஸ்ரீநிவர்சன் பேசுகையில் "மாணவர்களிடையே நல்ல கட்டுப்பாட்டையும் ஒழுக்கத்தையும் வளர்க்கவே விளையாட்டுப்போட்டிகள் நடைபெறுகின்றன. கோப்பாய் வட்டாரப் பாடசாலைகள் பலவற்றில் இருந்தும் மாணவர்கள் இவ்விளையாட்டுப்போட்டியில் கலந்து உற்சாகம் காட்டியமை மிகவும் வரவேற்கத்தக்கது" என்றார்.

விளையாட்டுப் போட்டிச் செயலாளர் திரு. எஸ் வி. வேலுப்பிள்ளையின் நன்றியுரையை அடுத்து செல்வி ஸ்ரீநிவர்சன் பரிசில்களை வழங்கினார்.

கோப்பாய், ஆவரங்கால், நீர்வேலி, உரும்பராய், ஈவினை, அச்சுவேலி, புன்னாலைக்கட்டுவன், புத்தகலட்டி, அச்செழு ஆகிய இடங்களைச்சேர்ந்த பாடசாலைகள் இவ்விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டன

போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:-

11 வயதுஆண்கள்: 50மீற்றர்: சி பாக்கியநாதன், செ குணரத்தினம், சி பத்மநாதன்.

75 மீற்றர்: ச ஜெயசிங்கம், ப அருந்தவம், செ சிவ

உயரம் பாய்தல்: சி அசோக்குமார், செ தம்பிராசா, க இரவிச்சந்திரன்.

நீளம்பாய்தல்: கி ஈஸ்வரமூர்த்தி, செ தர்மராசா, சி செல்வம்.

4X50 அஞ்சல்: உரும்பராய் சந்திரோதயம், ஆவரங்கால் எம் எம் த க பாடசாலை, புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாசாலை.

4X100 அஞ்சல்: உரும்பராய் சந்திரோதயம், ஆவரங்கால் எம் எம் த க பாடசாலை. அச்செழு எம் எம் த க பாடசாலை.

18 வயது பெண்கள் 75 மீற்றர்: த பேபிசரோஜா, சி ஜெகதீஸ்வரி. சி பத்மினி.

100 மீற்றர்: த பேபி சரோஜா, செ தவமணி தேவி, சி ஜெகதீஸ்வரி.

4X50 அஞ்சல்: உரும்பராய் சைவத்தமிழ்க் கலவன் பாடசாலை, அச்சுவேலி செந்திரேசா பாடசாலை, நீர்வேலி சி சி பாடசாலை.

4X100 அஞ்சல்: உரும்பராய் சந்திரோதயம், உரும்பராய் சைவத்தமிழ் பாடசாலை, அச்சுவேலி செந்திரேசா பாடசாலை.

ஆசிரியர்போட்டி: 100மீற்றர்: திரு எஸ் இளையகுட்டி, திரு எஸ் இரத்தினம்.

உத்தியோகத்தர்போட்டி: திரு டி ஆனந்தவேல், செல்வி எஸ் சரவணமுத்து, திரு சி சிவப்பிரகாசப்பிள்ளை, செல்வி இம்மானுவல்.

சாம்பியன்கள்: 13 வயது ஆண்: கி ஈஸ்வரமூர்த்தி (உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை), 13 வயது பெண்: த பேபிசரோஜா (உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை).

# வலி.மேற்கு பகுதி விளையாட்டு விழா

சங்கானை, வியாழன்

வலிகாமம் மேற்கு காரியாதிகாரி பிரிவின் தேசிய தினவிழாசிறப்பாகக் கொண்டாடுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை விழா செயற் குழு மேற் கொண்டுள்ளது.

வலிமேற்கு பகுதியிலுள்ள விளையாட்டுக் கழகங்கள், உள்ளூராட்சிமன்ற தலைவர்கள், விளையாட்டு போதனாசிரியர்கள் உட்பட பல பிரமுகர்கள் அடங்கிய கூட்டம்ஒன்றுசங்கானை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் ஜயசூரிய தலைமையில் வலி.மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சமாச மண்டபத்தில் நடைபெற்றது.

பின்வருவோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. வி. இராசசுந்தரம் (வலி மேற்கு கூ. சமாசத்தலைவர்) காரியதரிசி திரு. ரி. நடராசா, (விளையாட்டு போதனாசிரியர்) தனாதிகாரி திரு. எஸ். செல்வரத்தினம் (ப.ச. தலைவர் பண்டைத்தரிப்பு), திரு. எஸ். மார்க்கண்டு

## ஒரு கோஷ்டி வெற்றி

### மற்றக் கோஷ்டி ஆட்சேபம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அரியாலை "சுதேசிய விழா"வை முன்னிட்டு யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதியாட்டத்தில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம், கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்தை கடுமையான மோதலின் பின் வெற்றி பெற்றது.

இப்போட்டி ஆரம்பமாகி 7 நிமிடங்களின் பின் கிறீன் பீல்ட் கோஷ்டியினர் ஒரு கோலைப்போட்டனர். இக் கோஷ்டியினர் அடித்த கோல் சரியானது என மத்தியஸ்தர் தீர்ப்பளித்த பின் மத்தியஸ்தருக்கு உதவியாளராகக் கடமையாற்றிய இரட்டையர்களில் ஒருவர் அக்கோல் முறைதவறியது என கூறவே, மத்தியஸ்தர் அதனை ஏற்று தான் முதலில் அளித்த தீர்ப்பை மறுக்க

## சென். மேரிஸ் தோல்வி

யாழ்ப்பாணம், வெள்ளி

அரியாலை 'சுதேசிய விழா'வை முன்னிட்டுயாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற 'நொக்கவுட் உதைபந்தாட்ட, அரை இறுதி ஆட்டத்தில், தெல்லிப்பழை கிருஸ்சோபஸ் விளையாட்டுக் கழகம் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை வெற்றிபெற்றது.

ஆட்டம் முடிவடையும் போது, கிருஸ்சோபஸ் கோஷ்டியினர் 2—1 கோல்களால், சென். மேரிஸ் கோஷ்டியினரை தோற்கடித்தனர்.

இப்போட்டிக்கு, திரு. ஈ. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

(தே. நி)

## போட்டியில் பரிசு பெற்றோர்

யாழ்ப்பாணம், வியா.

யாழ், தொழில் நுட்ப நிலையமாணவர்மன்றநடாத்தியதமிழ்ப் பேச்சுப்போட்டி நடிப்புப் போட்டி, இசைப் போட்டி, ஆங்கிலப்பேச்சுப் போட்டி ஆகியவற்றில் பரிசுகள் பெற்றவர்களின் விபரம் வருமாறு: –

இசைப்போட்டி:- க. சிவம், செ. மயில்வாகனம், மா. சண்முகநாதன்.

தமிழ்பேச்சுப்போட்டி:- யோ. திலகரத்தினம், ப. வேதநாயகம், க. பொன்னையா, க. மகாதேவன்.

நடிப்புப்போட்டி:- க பொன்னையா, செ. மயில்வாகனம், க. சிவம்.

ஆங்கிலப் பேச்சுப் போட்டி:- செல்வி பே. துரையப்பா, செல்வி பி. கூறே, ஆ. குணரத்தினம்,

## ஆசிரியர் வென்றனர்

சங்கானை, வியாழன்

கனகராயன்குள மகாவித்தியாலய ஆசிரியர் குழுவிற்கும் புளியங்குள ரெயில்வே பகுதியினருக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கரபந்தாட்டப்போட்டியில் கனகராயன்குள மகாவித்தியாலய ஆசிரியர் குழுவினர் 2 - 1 ஆட்டங்களால் வெற்றியீட்டினர். மிக விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முதல் இரு ஆட்டங்களிலும் முறையே ஒவ்வொன்றைத் தட்டிக் கொண்டபோது ரசிகர்களிடையே பலத்த ஆதரவு இருகோஷ்டிகளுக்கும் கிடைத்தது. இறுதி ஆட்டம் கடும்போட்டியாக இருந்தும் புகையிரதப்பகுதியினர் 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
முத்துராமன், ராஜ்ஸ்ரீ
நடித்த
அனுபவி ராஜா அனுபவி

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30, 9-30
ஞாயிறு, போயா 2-30
ஜெய்சங்கர் - எல். விஜயலக்ஷ்மி
நடித்த
சபாஷ் தம்பி

REGAL at Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m
James Stewart
Richard Attenborough
in
THE FLIGHT OF THE PHOENIX

ரவிச்சந்திரன் - விஜயலக்ஷ்மி
நடித்த
எதிரிகள் ஜாக்கிரதை

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4-45, 7-00, & 9-45
YOU LIVE ONLY ONCE
(Spy Film)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Mickey Hargilay,
Lucia Paoli
in
THE SEVEN GOLDEN WOMEN AGAINST TWO 07

கெப்பிட்டல் பிளாஸா மைலன்
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) விஜிதா (ஹற்றன்)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
எஸ். வி. ரங்கராவ், பானுமதி
முத்துராமன், பாரதி, ஏ. வி. எம். ராஜன்,
நாகேஷ் நடித்த
வாசு பிலிம்ஸ் அளிக்கும்
பூவும் பொட்டும்
டைரக்ஷன்: தாதாமிராசி

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



சிவாஜி, விஜயா,
முத்துராமன்,
எல். விஜயலக்ஷ்மி,
நாகேஷ், குமாரிசச்சு
இன்னும் பலர் நடித்த
ஸ்ரீதரின்
ஊட்டி வரை உறவு
(ஈஸ்ட்மென் கலர்)

அத்துடன் காண்பிக்கப்படுகிறது யாழ் வெலிங்டன் திரையில்
மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்
எஸ். எஸ். வாசன் அவர்களால்
ஈஸ்ட்மன் கலரில் படமாக்கப் பட்டு சென்னையில் நடைபெற்ற
இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டு
கோலாகல காட்சியையும்
மற்றும்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா
ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்று
வதையும் பார்க்கலாம்!

நகழ்ச்சி, ... கோலம், 10-00 தேயர் விருப்பம்.

# இன்றைய பலன்

28-3-69
வெள்ளிக்கிழமை

திதி- தசமி இரவு 11-08 மேல் ஏகாதசி.

நட்சத்திரம்- பூசம் இரவு 3-13 மேல் ஆயிலியம்.

ராகுகாலம்- 10-44 12-14.

சுபநேரம்- 6-14 — 7-44.

இன்று பிறந்தவர்களுக்கு — இவ்வாண்டு சமயோசிதமான பலனையே குறிப்பிடும். வருமானம் திருப்திகரமாக இருப்பினும் செலவுகள் அதிகப்படியாகவே இருக்கும் விருந்தினர் வருகை தங்களுக்குத் தொல்லையைத் தரலாம். கல்வி உடையோர் கவனம் செலுத்தின் சித்திபெறுவதற்கு சிறந்தாண்டாகும்.

மேஷம்- வணிகத் தொடர்பு சுற்றுலா விருப்பு.

ரிஷிபம்- இதயங்கள் இணையும். இன்பம் பொங்கும்.

மிதுனம்- பரிதாப நிலை பகைத்துக் கொள்ளாதே.

கடகம்- கரும்பென நினைத்து கசக்கவும் செய்யும்.

சிம்மம்- சகோதரத் தலையீடு, சங்கடமான நிலை.

கன்னி- திரைமறைவில் சதி, திறமை தடைப்படும்.

துலாம்- வாகன சுகம், வளம்தரும் வாழ்வு.

விருச்சிகம்- தெளிந்த மனம், தேன்சொட்டும் வாழ்வு.

தனுசு- பாதையில் பழுதுண்டு, பயணத்தை தவிர்.

மகரம்- உள்ளமும் துள்ளும், உண்மையும் வெல்லும்.

கும்பம்- இன்னலின் பின்னல் சிக்கல்கள் மிகுதி.

மீனம்- உபகாரச் சிந்தை, உள்ளப்பூரிப்பு.

—சோதிடக்கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

தி. ராஜினி ... யோகினி, ந. சுசிலா,

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி
கைதடி கிழக்கு இந்து வாலிபர் சங்கத்தின் புது வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு கே. எஸ். கணபதிப்பிள்ளை, உபதலைவர்: திரு. வி. எஸ். இராசையா, செயலாளர்: திரு. எஸ். செல்லத்துரை, உப செயலாளர்: திரு. ரி. புஷ்பராசா, பொருளாளர்: திரு. எஸ். சுப்பிரமணியம், உப பொருளாளர்: திரு. எஸ். இராசையா, பத்திராதிபர்: திரு. எஸ். சிவசந்திரராசா பதினாறுபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. (ந. நி.)

## தபால் தந்தி ஊழியர் சங்க உறுப்பினர்

யாழ்ப்பாணம், வியா.
அகில இலங்கை தபால் தந்தி ஊழியர் சங்க வட கிளையின் 19-வது ஆண்டு பொதுக்கூட்டம் ஆனைப்பந்தி உயர்கலை மன்றத்தில் தலைவர் ஆ. வி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

சங்க நிர்வாக செயலாளர் திரு யோசேவ் சங்கத்தின் சார்பில் சில கோரிக்கைகளை தபால் மாவட்ட அத்தியட்சகரிடம் சமர்ப்பித்தார்.

புதிய நிர்வாகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஆ. வி. ஆறுமுகம், உபதலைவர்: எஸ். கந்தையா, பொதுச்செயலாளர்: அ. யோசேவ், நிர்வாக செயலாளர். த. கணேசன், பொருளாளர்: பொ. புண்ணியசிங்கம்.

23 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## சன சமூக நிலைய நிர்வாகிகள்

அல்லைப்பிட்டி, வியா.
வேலணை மேற்கு திருவள்ளுவர் சன சமூக நிலைய வருடாந்தக்கூட்டம் மேற்படி நிலையத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் இவ்வருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

காப்பாளர்: மு. ஆறுமுகம் ஜே. பி, தலைவர்: க. சண்முகராசா, உபதலைவர்: செ. அரசரத்தினம், காரியதரிசி: சி. கந்தசாமி, உப காரியதரிசி: க. முருகவேள், தனாதிகாரி: க. சுந்தரம்.

... போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:-

11 வயது ஆண்கள்: 50 மீற்றர்: சி பாக்கியநாதன், செ குணரத்தினம், சி பத்மநாதன்.

75 மீற்றர்: ச ஜெயசிங்கம், ப அருந்தவம், செ சிவசக்தி, ஆனந்தராசா.

அஞ்சல்- உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை, வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாசாலை, ஈவினை எம் எம் த க பாடசாலை,

நின்றுபாயும் அஞ்சல்: ஈவினை எம் எம் த க பாடசாலை. கோப்பாய்தெற்கு கந்தவேள் வித்தியாசாலை, உரும்பராய் சந்திரோதயம்.

11 வயது பெண்கள்; 50 மீற்றர்: ஆ சியாமளாரூபி. க சூரியகுமாரி, செ பவானந்தி,

4X50 அஞ்சல்; உரும்பராய் சந்திரோதயம், கோப்பாய்தெற்கு கந்தவேள் பாடசாலை, அச்சுவேலி செந்திரேசா பாடசாலை.

நின்றுபாயும் அஞ்சல்: உரும்பராய் சந்திரோதயம், அச்சுவேலி செந்திரேசா பாடசாலை, கோப்பாய் தெற்கு கந்தவேள் பாடசாலை.

13 வயது ஆண்கள் 75 மீற்றர்: சி செல்வம், கி ஈஸ்வரமூர்த்தி, செ சிவராசா,

100 மீற்றர்: இ மகேஸ்வரன், கி ஈஸ்வரமூர்த்தி, ஆ சத்தியமூர்த்தி.

## இந்து மகா சபை உறுப்பினர்

வெள்ளவத்தை, வியா.
இலங்கைச் சட்டக்கல்லூரி மண்டபத்தில் இந்து மகா சபைத்தலைவர் திரு. ஆ. வ க. நீலகண்டன் தலைமையில் நடந்த வருடாந்தக் கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கே. வி. மகாதேவன், துணைத்தலைவர்: திரு. கே. கே. பத்மநாதன், பொதுச் செயலாளர்: திரு. எஸ். எம். சண்முகநாதன், துணைச்செயலாளர்: திரு. எஸ். சண்முகலிங்கம், பொருளாளர்: திரு. எம் கதிர்காமநாதன், இதழாசிரியர்: திருமதி மாலினி சின்னத்துரை, கணக்காய்வாளர்: திரு. பி. நகுலேசன். உத்தியோகப்பற்றற்ற குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் என். கருணைகரன், இ. ஆறுமுகன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

கோ. வேலாயுதபிள்ளை, க. மாணிக்கம், நா. செல்வராசா ஆகியோர் நிர்வாக அங்கத்தினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

கோல் சரியானது என மத்தியஸ்தர் தீர்ப்பளித்த பின் மத்தியஸ்தருக்கு உதவியாளராகக் கடமையாற்றிய இரட்டையர்களில் ஒருவர் அக்கோல் முறைதவறியது என கூறவே, மத்தியஸ்தர் அதனை ஏற்று தான் முதலில் அளித்த தீர்ப்பை மறுத்து 'கோல் இல்லை' எனத் தீர்ப்பளித்தார்.

ஆட்டம் முடிவடையும் வரை இருகோஷ்டியினரும் கோல்கள் எதுவும் போடவில்லை.

இதன் பின் மத்தியஸ்தரால் மேலும் 10 நிமிடங்கள் கொடுக்கப்பட்டு ஆட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

மேலதிகமாக கொடுக்கப்பட்ட 10 நிமிடங்கள் முடிவடைவதற்கு சில நிமிடங்கள் இருக்கும் போது, சென். அன்ரனிஸ் கோஷ்டியினர் ஒரு கோலைப் போட்டனர். அக்கோல் முறைதவறிய (ஓவ சைட்) கோல் என கிறீன்பீல்ட் கோஷ்டியினர் மத்தியஸ்தரிடம் ஆட்சேபம் தெரிவித்த பட்சத்தில், மத்தியஸ்தர் ஆட்டம் முடிவுற்றதாக தமது 'விசில்' மூலம் தெரிவித்தார்.

இப்போட்டிக்கு திரு ஈ. குமரையா மத்தியஸ்தராக கடமை யாற்றினர்.

''சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தினருக்கு, மத்தியஸ்தரால் வழங்கப்பட்ட வெற்றி விளையாட்டு ரீதிக்கு அப்பாற்பட்டது என்றும் இப்போட்டியை மீண்டும், வேறு மத்தியஸ்தரின் தலைமையில் நடாத்த வேண்டுமெனவும்'' கூறி ஒரு கடுமையான ஆட்சபக்...

... திரு. வி. இராசசுந்தரம் (வலி மேற்கு கூ. சமாசத்தலைவர்) காரியதரிசி திரு. ரி. நடராசா, (விளையாட்டு போதனாசிரியர்) தனாதிகாரி திரு. எஸ். செல்வரத்தினம் (ப.ச. தலைவர் பண்டைத்தரிப்பு), திரு. எஸ். மார்க்கண்டு (கிராமசபைத் தலைவர் மானிப்பாய்) உட்படபலர் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

ஏப்ரல் 15-ம் திகதிகாலை 6-30 மணிக்கு விழா சங்கானை பொலிஸ் விளையாட்டுத்திடலில் ஆரம்பிக்கப்படும் விழாவில் சயிக்கிள் ஓட்டப்போட்டி, மரதன் ஓட்டப்போட்டி, கிறீஸ் கம்பம் ஏறல் போட்டி, கரபந்தாட்டப்போட்டி (இறுதி) ரேபிள் ரெனிஸ் இறுதிப் போட்டி ரேபிள் ரெனிஸ் இறுதிப் போட்டி (பெண்கள்) பாற்ரன்ரன் ஆட்டம் (பெண்கள்) பாற்மின்ரன் ஆட்டம் (ஆண்கள்) விநோத உடைப் போட்டி, கயிறு இழுத்தல் போட்டி சங்கீதக்கதிரைப் போட்டி ஆகியனவும் கலம்பநிகழ்ச்சிகளும் நடைபெறவிருக்கின்றன.

கடிதமொன்றை தாம் அரியாலை ''சுதேசிய விழா'' உதைபந்தாட்டக் குழுவிடம் சமர்ப்பித்திருப்பதாக, கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழககாரியதரிசி திரு. எல். ஜி. போல், எமது நிருபரிடம் தெரிவித்தார்.

(தே. நி)

களிலும் முறைப்படி ஒவ்வொன்றைத் தட்டிக் கொண்டபோது ரசிகர்களிடையே பலத்த ஆதரவு இருகோஷ்டிகளுக்கும் கிடைத்தது. இறுதி ஆட்டம் கடும்போட்டியாக இருந்தும் புகையிரதப்பகுதியினர் 1 புள்ளியால் வெற்றிகொள்ளப்பட்டனர்.

## தாமதம்

சங்கானை, வியாழன்
வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள பால்சபைகள் தங்கள் மாதாந்த அறிக்கைகளை மாதாமாதம் காலதாமதமின்றி மானிப்பாய் சுகாதாரக் கந்தோருக்கு அனுப்பிவைக்கத் தவறுவதால் தங்கள் பணத்தைப் பெற்றுக்கொள்வதில் காலதாமதம் ஏற்படுவதுடன் சுகாதாரக் கந்தோர் ஊழியர்களும் இவ்வேலையைச் சரிவரச் செய்துமுடிக்க முடியாத நிலையில் திண்டாடுகின்றனராம்.

## ஆங்கில வாரம்

யாழ்ப்பாணம், வெள்ளி
உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் ஆங்கில வாரம் 24-3-69 -ல் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் செ. சிவப்பிரகாசம் தலைமையில் கொண்டாடப்பட்டது,

ஆங்கிலத்தில் வாசிப்பு, எழுத்து, மனனப்பேச்சு. சிறுநாடகம், சம்பாஷணை, பாட்டு, கதைகூறல் ஆதிய விடயங்களில் பங்கு பற்றி வெற்றியீட்டிய முதல்மூன்று மாணவர்க்கும் அதிபரால் புத்தகப் பரிசில்களும் தராதரப்பத்திரங்களும் வழங்கப்பட்டன.


தம்பி அன் கோ.
வண்ணார்பண்ணையில்
ரூ. 10000/- தொடக்கம் ரூ. 30000/- வரை
சீதன சேமிப்புக்கு
வருடம் 12 சத விதம் வட்டி
கொடுக்கப்படும்.
ஒவ்வொரு வருடமும் வட்டி எடுக்கலாம்.
குறிப்பு:-
இப்பணத்தை 30 நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் மாமூல்நிலை திரும்புகிறது

## இராணுவ ஆட்சிக்கு பொதுமக்கள் வரவேற்பு

## கராச்சியில் கடுமையான செய்தித்தணிக்கை

ராவல்பிண்டி,மார்ச் 26

**பாகிஸ்தானில் இராணுவஆட்சி பிரகடனப்படுத்தியதைத் தொடர்ந்து மாமூல் நிலைமை திரும்பிக்கொண்டிருக்கின்றது. அமைதிக்காக ஏங்கிக்கொண்டிருந்த பொதுமக்கள் ராணுவ ஆட்சியை வெகுவாக வரவேற்றிருக்கிருர்கள்.**

கராய்ச்சியில் கடுமையான செய்தித்தணிக்கை ஏற்படுத்தப்பட்டிருப்பதாக நிருபர்கள் அறிவித்துள்ளனர்.

விளையாட்டுச்செய்திகளைத் தவிர வேறு செய்திகளை அனுப்புவதற்குவெளிநாட்டு நிருபர்கள் அனுமதிக்கப்படவில்லையென்று கூறப்படுகிறது.

முக்கிய தெருக்களில் எல்லாம் ராணுவத்தினர் ரோந்துசுற்றுகின்றனர். ராணுவஆட்சிக்கு எதிராக நடப்பவர்களைக் கைதுசெய்துவிசாரித்து தண்டிக்க ஆங்காங்கே ராணுவ நீதிமன்றங்கள் இயங்குகின்றன. தூக்குத் தண்டனையிலிருந்து கசையடியும் நீண்டநாள் கடூழியச்சிறையும் விதிப்பதற்கு இந்த நீதிமன்றங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது. விமான நிலையங்களில் ராணுவம்நிலைகொண்டிருக்கின்றது. உள்நாட்டு விமானசேவை வழமைபோல் நடைபெறுகின்றது. பாடசாலைகளும், கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் மீண்டும் திறக்கப்படுகின்றன. ஆயுதங்களைப் பொலிசாரிடம் சமர்ப்பிக்கும் காலக்கெடு நீடிக்கப்பட்டிருக்கின்றது. டெலிபோன், மற்றும் றேடியோ நிலையங்களையும் ராணுவம் மேற்கொண்டிருக்கின்றது.

அதிபர் பதவியிலிருந்து விலகிய அயூப்கானின்வாசஸ்தலத்தில் பலத்தபாதுகாப்பு ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன. அவர் வெளிநாடொன்றுக்கு சென்று ஓய்வுபெறக்கூடும் என்றும் கருதப்படுகின்றது. அதற்கு வசதியாக மூன்றுமாத காலம் அவருக்கு ரஜா வழங்கப்பட்டுள்ளது.

## றொடீஷிய கெடுபிடி:

## சுதேசிகளை விடுவிக்க பிரிட்டனுக்கு வற்புறுத்தல்

## ஐ. நா. தீர்மானம்

வாஷிங்டன், மார்ச் 27

றொடீஷிய சட்டவிரோத அரசாங்கத்திஞல் காவலில் வைக்கப்பட்டுள்ள எல்லா அரசியல் கைதிகளையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி பிரிட்டிஷ் அரசாங்கத்தைக்கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்றை ஐ.நா வின் காலனி ஆதிக்க எதிர்ப்புக்கமிட்டி நிறைவேற்றியிருக்கின்றது.

1970வில் அமுலாக்கபடவிருக்கும் ஐயன் ஸ்மித்தின் புதிய அரசியல் திட்டத்தைத் தடை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கும்ப்டி பிரிட்டன் கோரப்பட்டுள்ளது.

தென்ஞபிரிக்காவைப்பின்பற்றி கறுப்பர்களை வேருகவும் வெள்ளையர்களைவேருகவும் பிரித்துவைப்பதற்கான புதிய சட்டமொன்றை நிறைவேற்றவும் றொடீஷிய அரசாங்கம் முயற்சிகள் செய்துகொண்டிருக்கின்றது.

தென்ஞபிரிக்காவில் அரசாங்கத்துக்கெதிராகநடந்துகொண்டவர்கள் என்ற குற்றத்தின்மீது பெண்கள் உட்பட 11 தென்ஞபிரிக்கருக்கு 14 வருடங்களிலிருந்து 20 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## ஊழியர் சங்கடம்

சங்கானை, வியாழன்

சங்கானை பட்டினசபை ஊழியர்கள் சுகவீனம் காரணமாக ஒரு நாள் லீவு எடுத்தாலும் அதற்கு அரசாங்க வைத்திய அதிகாரியின்சான்றிதழ்கள்சமர்ப்பிக்கும்வண்ணம் பட்டினசபையினரால் கோரப்படுகிருர்களாம்.

சகல ஊழியர்களுக்கும் இரண்டு வார காலம் ஆயுள்வே வைத்திய அத்தாட்சிப் பத்திரம் வழங்குவதற்கு அரசரங்கம் வழி வகுத்திருந்தும் அதனை சங்கானைப் பட்டினசபையினர் ஏற்கமறுப்பு தெரிவிப்பதால் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் கஷ்டத்திற்குள்ளாகின்றனர் எனத் தெரியவருகிறது.

## மரணதண்டனை

காலி, வியாழன்

அம்பலாந் தோட்டை பொலிஸ் பகுதியிலுள்ள சூரியவீவாகுடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த டொலமுலாகே சோமசிறீ என்பவர் அதே குடியேற்றத்திட்டத்தைச் சேர்ந்த ஈ. டபிள்யூ. பி. பிரேமசிறீ என்பவரது கழுத்தில் சென்றவருடம் பெப்ரவரி 22-ம் திகதி இரவு நித்திரையின்போது கத்தியால் குத்திக் கொலைசெய்ததாகத் தொடரப்பட்டவழக்குகாலி அஸைஸ்நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. வி. நி. பண்டிதகுணவர்த்தன முன்னிலையில்விசாரணை செய்யப்பட்டபோது ஜூரி சபையினரின் ஏகமனதான தீர்ப்பைத் தொடர்ந்து நீதியரசர் சோமசிறீக்கு மரண தண்டனை விதித்தார்.

## யாழ். இளைஞர்கழகக் கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

'கொக்குவில் சந்தியிலிருந்து ஆடியபாதம் வீதிஊடாக் கல்வியங்காடு சென்று பின் நல்லூர் வீதி வழியாக யாழ்ப்பாணத்தை அடையும்' ஒரு பஸ் போக்குவரத்துச் சேவையை ஆரம்பிக்குமாறு கோரும் தீர்மானம் ஒன்று யாழ். இளைஞர்கழக கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. யாழ். விக்னேஸ்வர வித்தியாலய மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றபோது [illegible] மனதாக [illegible] டது.

இதுசம்பந்தமாக யாழ். ...

## 'சிறிமாவோ ஆட்சியில்தான் சிறுபான்மையினர் பிரச்னை தீரும்'

### பொன்னம்பலம் கூறுகிருர்

உடுப்பிட்டி, வியாழன்

"இலங்கையின் சிறுபான்மைப் பிரச்னை தமிழர் பிரச்னை அல்ல. இது ஒரு தேசிய பிரச்னையே. இப்பிரச்னையைத் தீர்க்கச் சிங்கள மக்கள் மத்தியில் வாழும் விவசாயிகள், தொழிலாளர்கள் நலவுரிமைக்காக முன்னணி அமைத்து வரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியில் தான் தீர்வு காண முடியும்"

இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். பிரதேசக் காரியதரிசி திரு. வ. பொன்னம்பலம் வதிரி முற்போக்கு வாலிபர் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவும் தமிழர் பிரச்னையை அனுதாபத்துடன் அணுகி உருவாக்கிய கொள்கைத் திட்டத்தைப் போன்று இதுவரை தமிழினத்தின நலவுரிமைகளைக் காக்க வேறுயாரும் இப்பிரச்னையைத் தீர்கக முன்வரவில்லை. முழு நாட்டின் பொருளாதார மறுமலர்ச்சிக்குச் சோஷலிச சமூக அமைப்பே உகந்தது.

வேலையற்ருேர் பிரச்னையைத் தீர்த்தல், வாழ்க்கைச் செலவைக் குறைத்தல் அவசியம் ஆக்கப்படவேண்டும். இக்குறைபாடுகளைப் போக்குவதற்காகப் போராடி வரும் சிறிமாவோவின் கூட்டணியுடன் தமிழ் மக்கள் மத்தியில் வாழும் தொழிலாளர்களும் விவசாயிகளும் கை கோர்த்து நின்று நாட்டின்வளர்ச்சிக்காக உழைக்கவேண்டும். அதேவேளையில் தமிழ் உரிமையையும் பெற்றுக் கொள்ள முடியும்."

திரு. பொன். குமாரசாமி பேசும்போது, "இன்று நாட்டின் வேலையில்லாப் பிரச்னை என்றும் இல்லாத அளவு உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. தேசிய அரசாங்கம் இப்பிரச்னையைத் தீர்க்க தவறிவிட்டது. தற்போது நாட்டிலுள்ள [illegible] சாலைகள் அனைத்தும் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா காலத்திலேயே நிறுவப்பட்டன. இலங்கையில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்டால் தான் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியும்" என்று சொன்ஞர்.

இக்கூட்டம் டாக்டர் எஸ். எஸ். மாசிலாமணி தலைமையில் நடைபெற்றது.

தற்கு யாழ். இளைஞர்கழகத் ...

## புதியசமாதான நீதவான்

பருத்தித்துறை, வியா.

நெலலியடி முன்னள் பட்டினசபை உறுப்பினரும், சுமார் 30 ஆண்டுகளாக இலங்கை அரசாங்கப் புகையிரதப்பகுதிக் கணக்காளராகவும் கடமையாற்றிய திரு. சிவசம்பு வெற்றிவேலு கரவெட்டி மேற்குப் பகுதிக்கு சமாதான நீதிபதியாக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## பாராட்டு

புலோலி, வியாழன்

கரவெட்டி ஞானசாரியார் பாடசாலையில் 30 வருடங்களுக்குமேல் கல்விகற்பித்து இளைப்பாறிய ஆசிரியர் திரு. மு. கந்தையாவின் சேவை நலம் பாராட்டும் முகமாக மேற்படிபாடசாலை பழைய மாணவரும், புதிய மாணவரும் ஓர் பிரிவுபசாரமளிக்கவிருக்கின்றன.

## உடுப்பிட்டியில் போட்டியிடுவார்

உடுப்பிட்டி, வியாழன்

எதிர்வரும் ஆட்சிமன்றப் பொதுத்தேர்தலில் உடுப்பிட்டித்தொகுதிக்கு இலங்கைத் தொழிற்சங்கசம்மேளனப் பொருளாளரும், கம்யூனிஸ்ட் கட்சி மத்தியகுழு உறுப்பினருமாகிய திரு. பொன்குமாசாமியைஅபேட்சகராக நிறுத்துவதென முடிவுசெய்யப் பட்டுள்ளது.

பருத்தித்துறையில் நடைபெற்ற கம்யூனிஸ்ட்கட்சி வடமராட்சிக்கிளைக் கூட்டத்தில் இம்முடிவு அறிவிக்கப்பட்டது, யாழ். பிரதேசகம்யூனிஸ்ட்கட்சிக் காரியதரிசி திரு. வ. பொன்னம்பலம்தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. கம்யூனிஸ்ட் அபேட்சகரான திரு. பொன் குமாரசாமி உபசபாநாயகர் ...

## கல்லூரி கட்டடம் இடிந்ததால் மாணவர்காயம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கல்லூரிக்கட்டடம் இடிந்து விழுந்ததால் மேல் வகுப்பு மாணவர் ஒருவர் காயத்துக்குள்ளாஞர். இச்சம்பவம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இங்குள்ள புராதன தொன்மை வாய்ந்த பிரதான கட்டடத்தின் ஒருபகுதியே இவ்வாறு இடிந்து விழுந்ததாகும். இக்கட்டடத்தைப் புதுப்பித்துக்கட்ட வேண்டுமெனவும், இதற்கென சுமார் 75,000 ரூபா செலவாகுமெனவும் கல்வி இலாகா அதிகாரிகளால் மதிப்பிடப்பட்டும், இது இன்னமும் கட்டப்படாதிருப்பது பெற்ருேர், ஆசிரியர் மத்தியில் அதிருப்தியை உண்டு பண்ணியுள்ளது.

காயத்துக்குள்ளான மாணவர் உடனடியாகஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டார். (கா நி)

## உழைப்புத்தான் அண்ணுவுக்கு செய்யும் நல்ல அஞ்சலி

அளவெட்டி, வியாழன்

"தமிழன் தரணியில் தலைநிமிர்ந்து வாழவேண்டுமாஞல் அவன் வாழ்கின்ற பிரதேசங்கள் பொருளாதாரத்தில் வளம் பெருக வேண்டும். இப்பொருளாதாரத்தைப் பெருக்க விவசாயிகளும், தொழிலாளர்களும் பாடுபட்டு உழைக்க வேண்டுமென வற்புறுத்தியவர் தான் அமரர் அண்ணு அவரின் முன்னேற்றப் பாதையைக் கடைப்பிடித்து நடப்பது தான் அவருக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்."

இவ்வாறு பலாலி பெரிய தம்பிரான் கோவில் திறந்த வெளியரங்கில் நேற்றிரவு நடைபெற்ற அண்ணு அஞ்சலிக்கூட்டத்தில் பேசும்போது மயிலை சிவ சண்முகதாசன் கூறிஞர்.

திரு. மு. சின்னையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மயிலிட்டி கிராமசபைத் தலைவர் திரு. வ. கிருஷ்ணசாமி அண்ணுவின் திருவுருவப்படத்தை திரைநீக்கம் செய்துவைத்தார்.

திரு. மயிலை சிவ சண்முகதாசன் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

நாட்டின் பொருளாதாரத்திலே தான் அந்நாட்டின் முன்னேற்றம் தங்கி இருக்கிறது என்பதை அண்ணு வலியுறுத்திவந்தார்.

தமிழர் சமுதாயத்தை முன்னேற்றுவதற்கு நாட்டின் வாலிப சமுதாயத்தையே நம்பி இருந்தார் அண்ணு.

அண்ணுவின் கருத்துக்கள், கொள்கைகள் என்பவற்றில் வேறுபட்டவர்கள் கூட அவரின் மனிதப் பண்பையும் அரசியல் நாகரீகத்தையும் போற்றுவதைக் காண்கிருேம் அரசியல் வாழ்வோடு பொருளாதாரத்தில் தாழ்ந்திருந்தவர்களையும் கல்வியில் பின்தங்கியிருந்தவர்களையும் முன்னேற்றி அதிலும் ஒரு புதிய சகாப்தத்தை அவர் உண்டு பண்ணிஞர்.

மயிலிட்டிக் கிராமசபைத் தலைவர் திரு. வ. கிருஷ்ணசாமி பேசுகையில் கூறியதாவது:

அண்ணுவுக்கு அஞ்சலிக் கூட்டம் நடத்திஞல் மட்டும் போதாது. அவரின் கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர் பட்டியலைப் பெருக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

தீண்டாமையை ஒழிக்க காந்தியார் எடுத்த நடவடிக்கையைப் பின்பற்றி அண்ணுவும் பாடுபட்டார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை எம்.பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில், தமிழினத்துக்குப் புத்துயிர் அளித்தவர் அண்ணு எனக் குறிப்பிட்டார்.

மற்றும் பலரும் அண்ணுவின் பெருமைகளை எடுத்துக் கூறினர்.

## 'தமிழ்நாடகங்களுக்குக் கல்லூரிகளில் சாவுமணி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தினுல் ... வைக்கப்பட்டுள்ள எல்லா அரசியல் கைதிகளையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்றை ஐ.நா வின் காலனி ஆதிக்க எதிர்ப்புக்கமிட்டி நிறைவேற்றியிருக்கின்றது.

ரொடீஷியாவில் விரைவில் ... செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கும்படி பிரிட்டன் கோரப்பட்டுள்ளது.

தென்னுபிரிக்காவைப்பின்பற்றி கறுப்பர்களை வேருகவும் வெள்ளையர்களைவேருகவும் பிரித்துவைப்பதற்கான புதிய சட்டமொன்றை நிறைவேற்றவும் ரொடீஷிய ...

தென்னுபிரிக்காவில் அரசாங்கத்துக்கெதிராகநடந்துகொண்டவர்கள் என்ற குற்றத்தின்மீது பெண்கள் உட்பட 11 தென்னுபிரிக்கருக்கு 14 வருடங்களிலிருந்து 20 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஒன்று யாழ். இளைஞர்கழக கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. யாழ். விக்னேஸ்வர வித்தியாலய மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றபோது இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதுசம்பந்தமாக யாழ். இ. போ. சபைத் தலைவரைச் சந்தித்து இப்போக்குவரத்துச் சேவைபற்றிய அத்தியாவசியத்தை விளக்குவ...

அளவு உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. தேசிய அரசாங்கம் இப்பிரச்னையைத் தீர்க்க தவறிவிட்டது. தற்போது நாட்டிலுள்ள தொழிற்சாலைகள் அனைத்தும் காலஞ்சென்ற பிரதமர் ...

... தற்கு யாழ். இளைஞர்கழகத் தலைவர் திரு. இரத்தினகோபால் தலைமையில் ஒரு கோஷ்டி நியமிக்கப்பட்டுள்ளது. (ந. நி.)

... தில் இம்முடிவு அறிவிக்கப்பட்டது, யாழ். பிரதேசகம்யூனிஸ்ட்கட்சிக் காரியதரிசி திரு. வ. பொன்னம்பலம்தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. கம்யூனிஸ்ட் அபேட்சகரான திரு. பொன் குமாரசாமி உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரத்தின் உறவினராவார். உபசபாநாயகரைஎதிர்த்து திரு. குமாரசாமி போட்டியிடுவார்.

... முன்னேற்றுவதற்கு நாட்டின் வாலிப சமுதாயத் ...

... துக் கூறினர்.

# ஜோர்டான்கிராமங்கள்மீது இஸ்ரேல் குண்டுவீச்சு

## 20 பேர் பலியாகினர்

### பாதுகாப்புசபை கூடுகிறது

அம்மான், மார்ச் 27

ஜோர்டான் கிராமங்களின்மீது நேற்று இஸ்ரேலியர் கடுமையான தாக்குதல் ஒன்றை நடத்தினர்கள். இதில்குறைந்தது 20 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் அதே எண்ணிக்கையானேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது. குண்டுகளை வீசியும் ரொக்கட்டுகளைப் பிரயோகித்தும் இஸ்ரேலியர் இந்தத் தாக்குதலை நடத்தினர்களாம்.

அரபு கொமாண்டோ நிலைகளின்மீதே தமது படைகள் தாக்குதல்நடத்தியதாக இஸ்ரேல் அறிவித்தது.

நேற்று இஸ்ரேலியர் நடத்திய தாக்குதல்பற்றி ஜோர்டான் ஐ. நா. பாதுகாப்பு சபையில் தெரிவித்துக்கொண்ட புகாரை தொடர்ந்துபாதுகாப்புசபை இன்று மாலையில் கூடி இதுபற்றி ஆராயவிருக்கின்றது.

தாக்குதல் நடந்த இடங்களை மன்னர் ஹுசேன் உடனடியாகப்போய்ப் பார்வையிட்டார்.

# நைஜீரியாவுக்கு வில்ஸன் இன்று போகிறார்

லண்டன், மார்ச் 27

பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. வில்ஸன் இன்று நைஜீரியாவுக்குப் புறப்பட்டுப் போகின்றார். சமரச முயற்சிகளில் ஈடுபடுவதற்காகத் தாம் போகவில்லையென்றும் அங்குள்ள பொதுவான நிலைமையை ஆராய்வதற்காகவே தாம் போவதாகவும் திரு. வில்ஸன் கூறினர். பயாப்ராவுக்கும் போவீர்களா என்று கேட்டபோது பயாப்ரா தலைவர்கள் விரும்பினுல் போவதில் தமக்கு மகிழ்ச்சியுண்டு என்று அவர் கூறினர்.

ஆனுல் பயாப்ராவுக்கு திரு. வில்சன் போவதை நைஜீரிய அதிகாரிகள் விரும்பவில்லை என்று தெரிகின்றது.

# அங்குய்லாவுக்கு பிரிட்டிஷ் அமைச்சர் போகிறார்

### சுதேசித்தலைவர் வரவேற்பு

வாஷிங்டன், மார்ச் 27

அங்குய்லாதீவுக்கு பிரிட்டிஷ் அமைச்சர் ஒருவர் போகவிருப்பதை அங்குய்லாத் தலைவர் ரொனுல்ட் வெப்ஸ்டர் வரவேற்றிருக்கிறார்.

பிரிட்டிஷ் அமைச்சர் வெப்ஸ்டர் நாளையதினம் அங்குய்லாவுக்குப் புறப்பட்டுப்போகவிருக்கிறார். இந்த விஜயம் பேச்சுவார்த்தைகளுக்கு வழிவகுக்கும் என்று திரு. வெப்ஸ்டர் குறிப்பிட்டார். அவர் இன்று தமது நாட்டுக்குத் திரும்பவிருக்கின்றார்.

இதற்கிடையில் அங்குய்லாத்தீவிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் பிரிட்டனுக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் வேளையில் பிரிட்டிஷ் இராணுவ என்ஜினியர்களும் அங்குபோய்ச் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். அங்குய்லாவில் அவர்கள் மேற்கொள்ளவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்களின் விபரங்களையும் பிரிட்டன் அறிவித்திருக்கிறது.

அங்கு புதிதாக பாடசாலையொன்று நிறுவப்படும் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதுபற்றியும், தண்ணீர்விநியோகம் பற்றியும் ஆய்வுகள் நடத்தப்படும்!

---

# நடிகை கிருஷ்ணகுமாரி திருமணம்

சென்னை, மார்ச் 27

தென்றல் வீசும், 'உயிராமானமா' 'சுபதினம்' ஆகிய தமிழ்ப்படங்களிலும் மற்றும் ஏராளமான தெலுங்குப் படங்களிலும் நடித்திருக்கும் நடிகை கிருஷ்ணகுமாரி தொழில் அதிபரான அஜய்மோகன் கெய்த்தான் என்பவரை திருமணம் புரிந்துகொண்டார் மணமகனுக்கு 39 வயது கிருஷ்ணகுமாரிநடிகை சௌகர்ஜானகியின் உடன்பிறந்ததங்கை. ஆனுல் திருமணம் திடீரென்று நடந்ததால். சௌகார்ஜானகி கலந்துகொள்ளவில்லை.

# அமைச்சர்களின் சொத்துவிபரம் வெளியாகும்

சென்னை, மார்ச் 27

தமிழ்நாடு அமைச்சர்களின் சொத்து விபரங்கள் மட்டுமன்றி தமிழ்நாடு சட்டசபை அங்கத்தர்களின் சொத்துவிபரங்களும்கூட வெளியிடப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் நேற்று கீழ் சட்டசபைக் கூட்டத்தில் கூறினர்.

# கலீல் மீண்டும் தலைவர்

கோட்டை, வியாழன்

தேசிய உயர்கல்விச் சபை அங்கத்தவரும், மாஜி தொழில் மந்திரியுமான டாக்டர் எம். சி. எம். கலீல் முஸ்லிம்லீக்கின் புதிய தலைவராக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

# தேசியகீதத்துக்கும்மந்திரிகளுக்கும் முடிச்சுப்போட வேண்டாம்

## தமிழ்நாடு சட்டசபையில் முதலமைச்சர் கருணாநிதி

சென்னை, மார்ச் 27

நான் முதலமைச்சராக ஏற்றுக்கொண்டிருக்கும் இந்தமந்திரிசபையில் எந்த மந்திரியும் தேசிய கீதத்தை அவமதிப்பதில் ஈடுபடமாட்டார்கள் என்பதில் நம்பிக்கை நிறையஇருக்கிறது.

இப்படிப்பட்ட சம்பவங்கள் எங்காவது நடக்குமானுல் அதை தனிப்பட்ட முறையில் எழுதி தெரிவித்தால் நல்லது. அதைவிட்டுவிட்டு சட்ட மன்றத்துக்கு கொண்டுவந்து அந்த விஷயம் பத்திரிகையில் பெரிதாக வருவதால் இந்தியாவில் ஒருபகுதியில் தேசிய கீதம் அவமதிக்கப்படுகிறது என்ற செய்திபகைவர் நாட்டுக்கு தித்திப்பான செய்தியாகிவிடும். ஆகவே இந்த முயற்சியில் அவர்கள் ஈடுபடவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக சபையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை.

இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் கீழ்சட்டசபையில் தேசிய கீதம் பற்றி எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த ஒரு தீர்மானத்தின் மீது பேசுகையில் கூறினர். காங்கிரஸ் உறுப்பினர் திரு. சித்தன் என்பவர் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

கடந்த 17-ந் திகதி திருமங்கலத்தில் அண்ணு பேருந்து நிலைய அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்ட அமைச்சர் ப. உ. சண்முகம் தேசியகீதம் பாடிக்கொண்டு இருக்கும்போது காரில் ஏறி புறப்பட்டுப் போய் விட்டார். இதுகுறித்து விவாதிக்க சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டும். என்று அவர் கூறினர்.

இதற்கு பதில் அளித்து முதல் அமைச்சர் கருணாநிதி கூறியதாவது:

தேசிய கீதமானது நாட்டின் மானத்தையும் பண்பாட்டையும் ஒருமைப்பாட்டையும் மதிப்பதற்காக இருக்கிறது என்று சித்தன் அவர்கள் கூறினர். இவைகளை அவமதிக்கக் கூடாது என்பதில் இந்த மன்றத்தில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை.

சில நாட்களுக்கு முன்னுல் கூட இதே மன்றத்தில் தேசிய கீதத்திற்கு தக்க மரியாதை கொடுக்கப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு அக்கறைகொண்டு இருக்கிறது என்று கூறினேன்.

ஆனுல் தேசிய கீதத்தையும் தி. மு. க. தலைவர்களையும் இணைத்து அவர்கள் தேசியகீதத்தை அவமதிக்கிறார்கள்.

என்ற தவருனபிரசாரத்தை சில ஏடுகள் ஒழுங்காக செய்துவருகின்றன.

இந்த மாநில மந்திரிகள் தேசியகீதத்தை அவமதிக்கிறார்கள் என்று கூறுவதன் மூலமே அவர்களே தேசிய கீதத்திற்கு அவமரியாதை செய்கிறார்கள் என்று கருத இடம் ஏற்படுகிறது.

அதுபற்றி அமைச்சர் ப. உ. சண்முகத்திடம் நான் கேட்டேன். "இந்த விழாவில் கலந்துகொண்டுவிட்டு அங்கிருந்து ரயில் ஏறவேண்டியது இருந்தது. ஆகையால் தான் விழா முடியும்வரை அங்கு தங்கி இருக்காமல் அடிக்கல்நாட்டிய உடனேயே நான் அங்கிருந்து புறப்பட்டு விட்டேன். பிறகு என்ன நடந்தது என்பது எமக்கு தெரியாது என்று அவர் என்னிடம் கூறினர்.

கவர்னர் மற்றும் டெல்லி மந்திரிகள் கலந்துகொள்கிற நிகழ்ச்சிகள் மற்ற காங்கிரஸ் மந்திரிகள் கலந்து கொள்கிற நிகழ்ச்சிகளில் கூட விழா முடியும்வரை அவர்கள் இருந்துபோவது கிடையாது. அவர்கள்போன பிறகுதான் தேசியகீதம் பாடப்படுகிறது. ஆகவே விழா முடியும்வரை அமைச்சர் இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை. ஆகவே அமைச்சர்களை தேசியகீதத்துடன் முடிச்சுப்போடுவது நல்லதல்ல.

இதுபற்றி உறுப்பினர் கறுப்பையா கொடுத்த தீர்மானத்தில் தேசியகீதம் பாடிக் கொண்டிருக்கும் போதே அமைச்சர்போனதாக குறிப்பிட்டு இருக்கிறார்.

ஆனுல் அவர் குறிப்பிட்டு இருக்கும் நவசக்தி பத்திரிகையில் விழா முடியும் வரை மந்திரி இருக்கவில்லை. இடையிலேயே போய்விட்டார். அதன்பின் நடந்த தேசிய கீதத்தில் அவர் கலந்து கொள்ளவில்லை'' என்றுதான் பத்திரிகையில் செய்திவந்திருக்கிறது.

ஆகவே இதில் முரண்பாடு இருக்கிறது. மந்திரி அந்த நிகழ்ச்சியைவிட்டு போன பின்பு தான் தேசிய கீதம் பாடப்பட்டுஇருக்கிறது.

ஆகவே தமிழ்நாட்டு மந்திரிகள் இப்படிப்பட்ட செயல்களில் இறங்குகிறார்கள் என்ற தவருன பண்பாட்டை ஏற்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒத்திவைப்புப் பிரேரணையை சபாநாயகர் நிராகரித்தார்.

# கோப்பாய் செய்திகள்

— நமது நிருபர்

கோப்பாய், வியா.

0 0 0

### இரு பிரிவாகும்

கோப்பாய் தெற்கு கிராமசேவகர் பகுதி இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் சனத்தொகை அதிகமாகவுள்ளதாகவும் 10 வட்டாரங்களைக் கொண்ட விஸ்தாரமான பிரதேசமாகவும் இருப்பதாலேயே இரு பிரிவுகளாக்கப்பட்டுள்ளது.

0 0 0

### நாவலர் நினைவு முத்திரை

இருபாலை சைவபரிபாலன சங்கத்தினர் நல்லை ஸ்ரீ நாவலர் பெருமானுரது சேவையை நினைவுகூரும் முகமாக நாவலர் ஞாபகார்த்த முத்திரை யொன்றை வெளியிடக் கோரும் தீர்மானம் ஒன்றை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளனர்.

0 0 0

### தொலைபேசி சீர்கேடு

கோப்பாய் கிராம சபை அலுவலகத்திலுள்ள தொலைபேசி நாள்தோறும் 5; 6 மணித்தியாலங்களுக்கு வேலைசெய்வதில்லையாம் இச்சீர்கேடு காரணமாக மேற்படி கி. ச. ஊழியர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

0 0

### சமய அறிவுப் போட்டி

கோப்பாய் திருவள்ளுவர் தவநெறி மன்றத்தாரால் ஆண்டு தோறும் நடாத்தப்பட்டுவரும் சமய அறிவுப் போட்டியை வழமைபோல இவ்வருடமும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

0 0 0

### புனருத்தாரணம்

கோப்பாய் வடக்கு கண்ணகை அம்பாள் ஆலய மூலஸ்தான, கோபுர புனருத்தாரண வேலைகள் துரிதமான முறையில் நடைபெற்றுவருகின்றன. இத்திருப்பணி வேலைகளை வலிகிழக்குக் காரியாதிகாரி திரு. வி. கந்தப்பிள்ளை தலைமையிலான திருப்பணிச்சபையினர் முன்னின்று நடாத்திவருகின்றனர்.

0 0 0

### மீண்டும் பரிசிலனை

கோப்பாயிலுள்ள பல கோயில்களுக்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த தர்மப் பணத்துக்கான விண்ணப்பப் பத்திரங்கள் மீண்டும் பரிசிலனை செய்யப்பட்டு அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் பணம் வழங்குதைற்கான நடவடிக்கைகளை வலிகிழக்குக் காரியாதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் மேற்கொண்டுள்ளனர்.

# 'தமிழ்நாடகங்களுக்குக் கல்லூரிகளில் சாவுமணி'

யாழ்ப்பாணம், வெள்ளி

'மாணவர்களும், மாணவிகளும் சேர்ந்து நடிக்கக்கூடாதென்ற புதிய கட்டுப்பாட்டினுல் தமிழ் நாடகங்களுக்கு கல்வி அமைச்சு சாவுமணி அடிக்க முன்வந்திருக்கிறது.'

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியரான திரு. இ. மகாதேவா இவ்வாறு தெரிவித்தார்.

கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலை நாடக விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுகையில் திரு. இ. மகாதேவா மேலும் பேசியதாவது:-

உலகமெங்கணும் நாடகங்களை வளர்ப்பதில் கல்லூரிகளே முக்கிய பங்குகொண்டு வருகின்றன. ஆண் பாத்திரத்துக்கு ஆணையும், பெண் பாத்திரத்துக்கு பெண்ணையும் போட்டு நடிப்பதாலேயே நாடகம் மெருகேறுகின்றது.

ஆனுல் எங்கள் கல்வி அமைச்சு மட்டும் இப்போது ஒரு புதிய கண்டு பிடிப்பை நடாத்தியுள்ளது. அதுதான் மாணவர்களும், மாணவிகளும் சேர்ந்து நடிக்கக்கூடாதென்பது. இதனுல் தமிழ் நாடகங்களுக்குக் கல்லூரிகளில் சாவுமணி அடிக்கக் கல்வி அமைச்சு திட்டம் தீட்டியுள்ளது என்றும் குறிப்பிட்டார். (கா. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கிராமத்தவர்களின் நலன் கவனிக்கப்படும் போதுதான் ஒரு நாடு முன்னேற முடியும். பின்தங்கியிருப்பவர்கள் முன்னேறுதபோது முன்னேற்றம் எப்படி சாத்தியமாகும்.

—மகாத்மா காந்தி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 15-ந்திகதி
(28 - 3 - 69)

## மீண்டும் வகுப்புவாதக் குரல்

போர் முழக்கம் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது எந்த அரசுகளுக்கும் நாடுகளுக்கிடையிலும் இந்த யுத்த பேரிகை முழங்கவில்லை. நமது நாட்டில் ஒரு பகுதியில்மேடைகளில் முழங்கும்குரல் ஒலியையும் அதற்கு மற்றொரு பகுதியில் கிளம்பும் எதிரொலியையும் தான் குறிப்பிடுகிறோம். இவை தேர்தல் களத்தில் சுலபமாக வெற்றியீட்டுவதற்கான வகுப்புவாதக் குரலாக இருப்பதுதான் வேதனையளிப்பதாக இருக்கிறது. தேர்தல் வரும் போகும்; ஆட்சிபீடத்தில் இன்று ஒருவர் அமர்வார்; நாளை ஒருவர் வருவார். நாடும், நாசிடு மக்களும் அப்படியல்ல.

'தி. மு. க.' 'நாம் தமிழர்' என்ற பூச்சாண்டி பூதாகாரமாக வளரக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன. இந்தப பூச்சாண்டிப் பிரசாரத்துக்கு முற்றுப்புள்ளிவைக்க ஆளும் கட்சியினரும் அடுத்த தேர்தலைக் கருத்தில் கொண்டு அஞ்சுவதாகவே தோன்றுகிறது. தேசியப் பத்திரிகைகள் என்று சொல்லிக்கொள்ளும் பத்திரிகைகளே இந்தப் பிரசாரத்துக்கு தூபம்போடுகின்றன. இதுபோதாதென்று சிங்களத் திரைப்பட வளர்ச்சிக்கு அரசாங்கம் உதவியும் ஊக்கமும் அளிக்கவில்லையென்று தங்கள் குறைகளை அரசாங்கத்தின் காதுகளுக்கு எட்டவைக்க வந்த சிங்களத் திரைப்படக் கலைஞர்கள், தங்கள் ஊர்வலத்தில் நிகழ்த்திய கோஷங்களும் மேடையில் நிகழ்த்திய பேச்சுக்களும் தி. மு. க. வைச் சேர்ந்த நடிகர் எம். ஜி. ஆரின் படங்களைக் குறிப்பாகவும் தமிழ்ப்படங்களைப் பொதுவாகவும் இறக்குமதிசெய்வதற்குத் தடை விதிக்க வேண்டுமென்ற தொனியிலேயே அமைந்திருந்தன. இந்தக் கோரிக்கையும் 'தி. மு. க.' 'நாம்தமிழர்' பூச்சாண்டியுடன் சம்பந்தப்படுத்தப்பட்ட தமிழ்த் திரைப்படங்கள் பற்றிய பிரசாரமும் தானே இந்தியாவிலிருந்து

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும். தமிழ்ப் படங்கள் எல்லாமே தரமான, பயன்தரக் கூடிய, சிறந்த படங்கள் என்று நாம் சொல்லவில்லை. இதே சமயம் இங்கு தயாரிக்கப் பட்டுள்ள சிங்களப் படங்கள் அனைத்தும் பயனுள்ள தரமான நல்ல படங்களுமல்ல. இங்கு இறக்குமதி செய்யப்படும ஆங்கில, இந்திப்படங்கள் அனைத்தும் சிறந்த நல் வழிகாட்டக்கூடிய படங்கள் என்றும் ஒப்புக்கொள்ள முடியாது. சிங்களத் திரைப் படங்கள் சில தமிழ்த்திரைக் கதைகளை தழுவி எடுக்கப் பட்டவையென்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். தமிழ்த் திரைப்படங்களை மட்டுமல்லாது ஆங்கிலத் திரைப்படங்களின் இறக்குமதியிலும் கட்டுப்பாடு விதிப்பதில் தவறில்லை. அதே சமயம் இங்கு தரமான நல்ல சிங்கள, தமிழ்த் திரைப் படங்களைத் தயாரிப்பதற்கு அரசாங்கம் உதவியும் ஊககமும் அளித்தால் பயனுண்டு

'தி. மு. க.' 'நாம் தமிழர்' என்ற பூச்சாண்டியுடன் தமிழ்த் திரைப்படங்களையும் சேர்த்து தென்னிலங்கையில் 'போர்க் குரல்' எழுப்புவதற்கும் அதற்கு எதிரொலியாக வடக்கு கிழக்கில் 'போர்க் குரல்' எழுப்புவதற்கும் இடமளிப்பது தேர்தலில் அரசியல் இலாபம் பெற வழிகாட்டுமேதவிர நாட்டின் அமைதிக்கும் தேசிய ஐக்கியத்துக்கும் நாட்டின் முன்னேற்றத்துக்கும் நிச்சயம் வழிவகுக்காது. இந்தப் பிரசாரங்களுக்கு அரசாங்கம் மட்டுமல்ல பொதுமக்களும் இடம் கொடுக்கக் கூடாது. தமிழ்த் தலைவர்களும் பிரதம மந்திரியை மட்டுமல்ல. எதிர்க்கட்சித் தலைவர்களையும் தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேசி தமிழ்க் கலை, கலாச்சாரத்தைப் பேணுவதற்கு அவர்களுடைய உதவியையும் ஒத்துழைப்பையும் பெறுவதுதான் அரசியல் விவேகம். வகுப்புவாதம் ஓர் இடத்தில் தலைதூக்கினால் அதற்கு முடிவுகட்ட வழி

இன்று கொடியேற்றம்

## பழமையும் புதுமையும் வாய்ந்த மருதடி விநாயகர்

ஈழத்திருநாட்டிலே உள்ள விநாயக சிவஸ்தலங்களிலே பழமையும் புதுமையும் வாய்ந்தது மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயமாகும்.

மூன்று திசைகளிலும் வயல்களால் சூழப்பட்ட வெட்டவெளியில் உள்ள மருதமரத்தின் அடியிலே வீற்றிருக்கும் இவ்வாலயத்திற்கு மற்றைய ஆலயங்களைப் போல் அல்லாது கிழக்கும் மேற்கும் வாசல்கள் இருப்பது இதன் அற்புதத்தைக் காட்டுகிறது. அநாதியாக இந்த ஆலயம் கிழக்குப் பக்கம் பார்த்து இருந்ததாகவும் பின்பு மிஷனரிமார் இவ்வாலயத்தின் முன் ஒரு வைத்தியசாலையையும் அதனுள்ளே ஒரு தேவாலயத்தையும் உருவாக்கிய பொழுது மருதமரத்தடி விநாயகர் இரவோடு இரவாக மேற்குப்பக்கம் திரும்பியபடியினால் இச்கோவிலுக்கு இருதிசைகளிலும் வாசல்கள் வந்ததாக முன்னோர் கூறுவர்.

ஈழநாட்டில் தமிழ் அரசர்கள் ஆட்சி செய்த காலத்தில் இவ்வாலயம் பல சிறப்புக்கள் பெற்று விளங்கியது. இந்த ஆலயத்தின் வளர்ச்சியைக் கண்ட அன்றைய ஆட்சியாளர்களான ஒல்லாந்தர் இவ்வாலயத்தை இடித்துத் தரைமட்டம் ஆக்கினார்கள்.

இவ்வாலயத்திற்கு முன்பாகவும் பின்பாகவுமுள்ள இரு நுழை வாசல்களிலும் உள்ள நெடிய கோபுரங்கள் இக்கோவிலை அழகுபடுத்துகின்றன. இங்கு மூலஸ்தானத்துக்குக் கிழக்குப் பக்கமாக மிகவும் முதிர்ந்த மருதமரமொன்று தல விருட்சமாகக் காட்சியளிக்கிறது. இதன்

— சி. கணேசவேல் —

காரணமாகத்தான் இதற்கு மருதடிப்பிள்ளையார் என்று பெயர் சூட்டப்பட்டது. இம்மரமும் கோவிலுக்கு மேற்குப்புறமாகவுள்ள மலர்கள் நிறைந்த குளமும் மிகவும் பழமைவாய்ந்ததென்று கருதப்படுகிறது.

முதன்முதலாகச் சிறிய ஆலயமாக உருப்பெற்ற இந்த விநாயகர் ஆலயம் ஈழத்தின் பல பாகங்களிலுமுள்ள சைவர்களைப் படிப்படியாகக் கவரத்தொடங்கியது. பல இந்துப் பெருமக்களால் பொங்கல் பூசை தினமும் நடைபெற்றுவந்தது. எல்லாவித எதிர்ப்பாலும் இவ்வாலயம் மென்மேலும் முன்னேறியது. கோவில் திருப்பணி வேலைகளும் இங்கு வருடா வருடம் பங்குனியில் கொடியேறி சித்திரை வருடப்பிறப்பிலன்று தேர்த்திருவிழா நடைபெறும்.

புனருத்தாரண வேலைகள் நடைபெற்று கோபுரமும் மற்றும் முன்பக்கத்தில் இரண்டு பெரிய மணிக்கூட்டுக்கோபுரமும் இவ்வாலயத்தை அழகுபடுத்துகின்றன. கோவிலின் வடக்குப்புறத்தில் சைவ அபிமானிகள் தங்குவதற்கு வசதியான மடங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன.

ஆண்டுதோறும் பக்தர்கள் வந்து குவியும் இத்தலத்தின் தேர்த்திருவிழாவின் நிகழ்ச்சிகளை வானொலியில் அஞ்சல்செய்ய அரசாங்கம் இம்முறையாவது முன்வர வேண்டுமென சைவ அடியார்கள் ஆவல் காட்டுகின்றனர்.

## 'இந்துக்கடவுள் சிலைகளே கோட்டையில் காணப்பட்டவை'

### புதைபொருள் பகுதி முன்னாள் படப்பிடிப்பாளர் தகவல்

கோட்டை, வியாழன்

'இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது திருக்கோணமலை பிரடரிக்கோட்டையில் காணப்பட்ட இரு உருவங்களும் புத்தபிரானது சிலைகள் அல்ல. அவை இந்துமதக்கடவுளர்களின் உருவங்களாகும்' என்று புதைபொருளாராய்ச்சி இலாகாவின் ஓய்வுபெற்ற படப்பிடிப்பாளர் திரு. என். ஏச். ஆர். நாலாவங்ஸ தெரிவித்துள்ளார்.

திரு. நாலாவங்ஸ மேலும் இதுபற்றித்தெரிவிக்கையில்,

'இரண்டாவது உலகமகா யுத்தத்தின்போது நான் அநுராதபுரத்திலிருந்தேஸ் அங்கிருக்கும்பொழுது அப்போது புதைபொருளாராய்ச்சி ஆணையாளராகவிருந்த டாக்டர் எஸ். பரனவிதானவிடம் இருந்து திருக்கோணமலையிலுள்ள பிரடரிக்கோட்டைக்குச் சென்று அங்கு நீர்ப்பாசன இலாகாவினால் நிலத்தினுள் இருந்து எடுக்கப்பட்ட இருசிலைகளையும் அகற்றும்படி உத்தரவு எனக்குக் கிடைத்தது.

பிரஸ்தாப சிலைகள் இரண்டையும் கோட்டையில் இருந்து 'லொறி' மூலம் கொண்டு சென்று திருக்கோணமலைக் கச்சேரியில்வைத்தது நானே தான். என்னால் எடுக்கப்பட்ட இந்தசிலைகளின்புகைப் படங்கள் கொழும்பு புதைபொருளாராய்ச்சி இலாகாவில் இப்பொழுதும் கிடைக்கக்கூடியதாகவுள்ளது. அவைகள் இரண்டும்இந்துத் தெய்வங்களையேயன்றி புத்தரினது சிலைகள்அல்ல என்று குறிப்பிட்டார்.

## 'தமிழரசு வரலாற்றில் புதிய கட்டம் உருவாகப்போகிறது'

### வல்வெட்டித்துறையில் அமிர்தலிங்கம்

## நவிண்டில் செய்திகள்

### காயமுற்றார்

மேசன் வேலைக்குச் சென்றவர் விபத்தில் சிக்கி மண்டையில் காயமுற்றார். நவிண்டிலைச் சேர்ந்த கோ. ஐயம்பிள்ளை [illegible] என்பவரே தூக்குக்குண்டினால் மண்டை உடைந்து அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார்.

0 0 0

### கட்டடப் பூர்த்தி

நவிண்டில் நாச்சிமார் கோவில் அம்பாள் படிப்பக மன்றத்தாரின் புதிய கட்டிடம் பூர்த்தியாகி வருகின்றது. அடுத்தமாதம் உடுப்பிட்டித் தமிழ்மன்றத் தலைவர் டாக்டர் திரு. ஆ. திருச்சிற்றம்பலத்தால் இப்புதிய கட்டடம் திறந்து வைக்கப் படவுள்ளது.

0 0 0

### இருந்தும் இல்லாதநிலை

நவிண்டிலிலுள்ளசாண்டா சந்தைக் கிணற்றில் பலகாலமாக நீர் அள்ளுவதற்கு வாளி இல்லாததால் வியாபாரிகளும் பொதுமக்களும் பெரும் கஷ்டமடைந்து வருகின்றனர். இதுசம்பந்தமாக உடுப்பிட்டி கிராமசபையின் 22-ம் வட்டார உறுப்பினர் திரு. க. அண்ணமலை உடுப்பிட்டிக் கிராமசபைத்தலைவரிடம் முறையிட்டுள்ளார்.

0 0 0

### நான்குநாடகங்கள்

நவிண்டில் வடகருணை வளர்மதி நாடகமன்றத்தாரால் ஓரே மேடையில் நான்கு நாடகங்கள் புத்தாண்டுதினத்தில்அரங்கேற்றப்படவிருக்கின்றன. கலைவாணி நாடக மன்றத்தினரின் 'இழந்த காதல்' அம்பாள் நாடக மன்றத்தின் 'மதுவா தங்கையா', வளர்மதி நாடக மன்றத்தாரின் 'தந்தையின் கட்டளை' 'குடிப்பேன் பொலிடோல்' ஆகிய நாடகங்களும்மேடையேறவுள்ளன.

### மாயமாக மறைவு

நவிண்டில் சன சமூக நிலையத்தில் திருடர்கள் புதுவிதத்திருட்டில் ஈடுபட்டுள்ளனர். வாசகர்களுக்காக வெளியில் வைக்கப்பட்டிருக்கும் புதினப்பத்திரிகைகள் தினமும் மாயமாக மறைந்து வருகின்றனவாம். இத்திருட்டைக் கண்டுபிடித்துத் தகவல் தருபவருக்குப் பரிசு வழங்கப்போவதாக நிலையச் செயலாளர் திரு. சி. தில்லை

## ஐயாறன் எழுதுவது

விடியற்காலை 5 மணி முதல் இரவு 10 மணிவரை நம் தாய்மார்களில் பலரும் அடுப்படியிலே கிடந்து மாய்கிறார்கள். தினசரி ஒரே மாதிரி சாப்பாடு சாப்பிட்டு நம்மில் பலருக்கும் ஒரு மாறுதல் வேண்டுமென விரும்புகின்றோம்.

ஒவ்வொரு தாய்மாரும் ஒவ்வொருவித கறி சமைப்பதில் கைதேர்ந்தவர்கள். ஒவ்வொரு வீட்டிலும் போட்டா போட்டியுடன் ஒவ்வொருவித கறியும், பதார்த்தமும் சமைத்து, எல்லாரும் சேர்ந்து ஓரிடத்தில் கூடி 'கூட்டாஞ்சோறு' விருந்து சாப்பிட்டால் எப்படி இருக்கும்! அந்தமாதிரி ஒரு நல்ல ஏற்பாட்டை மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றத்தார் முந்தநாள் செய்திருந்தார்கள். அடிக்கடி பல ஊர்களிலும் ''கம்யூன்கள்'' போல் இவ்விதம் செய்வதாயின்......!

முதல்நாள் அம் மன்ற அங்கத்தவர் ஆண்களும், பெண்களும் மன்றத்தோட்டத்தைத் துப்பரவாக்கியும், வேலிகட்டியும் சிரமதானம் செய்தார்கள். விழாவன்று வாசலிலே கார்த்திகைதீபம் போல், அகல்விளக்குகளை வரிசையாக ஏற்றிவைத்து வரவேற்றது அழகாக இருந்தது. இன்னிசைவிருந்து இன்பமளித்தது.

அம்மன்றத்தில் சேர என்ன நிபந்தனை தெரியுமா? மதுபானம்அருந்தக்கூடாது. புகைபிடிக்கக்கூடாது. கூடிய மட்டில் பிறருக்கு உதவி செய்து பரஸ்பரம் ஒத்துழைத்து வாழவேண்டும். சாதிசமய வேறுபாடின்றி யாரும் இதில் சேரலாம்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மகாத்மாவைப் பின்பற்றி சர்வசமய கூட்டுப் பிரார்த்தனை செய்கிறார்கள். பல நாடகங்களை இலவசமாக் நடித்துக் கொடுத்து, பல நல்ல காரியங்களுக்கு உதவிவருகிறார்கள். பல அங்கத்தவர் சேர்ந்து மன்ற கீதம் பாடியது மிக இனிமையாக இருந்தது. இலங்கையின் பல பகுதிகளிலும் இதற்கு அங்கத்தவர்களும் இருப்பதாயும், பல கிளைகள் ஏற்படுத்தி, அன்புத்தொண்டின் மூலம் மக்களிடையே ஒற்றுமையையும், நட்புறவையும்

மேலும் வீட்டுத்தோட்டங்களில் பயிரிடும் காய்கறி முதலிய பொருட்களை மலிவாக விற்பனைசெய்து மன்றத்துக்கு உதவியுள்ளனராம். அன்புப் பணியை அடிப்படையாகக் கொண்டு சமூகத்திலேமறுமலர்ச்சியை ஏற்படுத்த இந்த மன்றம் முன்மாதிரியாக முயன்றுவருவதைக் கண்டேன். இந்த மன்றமும் அதன் பணிகளும் வாழ்க, வளர்க!

0 0 0

அன்பும் பண்பும் மிக்க இடதுசாரித் தலைவர் ஒருவர் விருந்துக்குப் பின் பேசுகையில், அஹிம்சைமூலமே எல்லா சீர்திருத்தங்களையும் செய்யமுடியாதென்றும், இச்சமயம் ஓரளவு பலாத்காரமும் தேவைப்படலாமென்றும் சொன்னார்.

நடராஜப் பெருமானின் பஞ்சகிருத்தியங்களில் அழித்தலும் ஒன்றுதான், இன்று பாகிஸ்தானின் மேற்கு ஆசியா வியட்நாம் முதலிய இடங்களில் நடைபெறும் காரியங்களும், ஆஸ்திகர்களின் நம்பிக்கைபடி, இவன் செயல் தானே. அவனன்றி ஓரணுவும் அசையுமா?

ஆனால் பலாத்காரத்தை விட அன்புக்கே அதிக சக்தியுண்டு. நீடித்த மேலான பயன் அளிப்பதுமதுவே தெய்வத்தை அதாவது அன்பை நம்மில் பலரும் மறந்துவிட்டதால் தான் சமூகத்திலும், உலகிலும் பல அநீதிகளும் கொடுமைகளும் தலைதூக்குகின்றன. சுயநலமும் பணஆசையும், தெய்வத்துக்கு அதாவது அன்புக்கு இடமில்லாமல் செய்கின்றன, மக்களெல்லாம் ஒரு குடும்பம்போல் அன்பை தியாகசேவையை அடிப்படையாகக் கொண்டு வாழமுடியாதா? நிலம் யாருக்குச் சொந்தம் என்பதற்குப் பதில், நிலத்தில் கிடைக்கும் பலன்கள், மக்கள் எல்லாருடைய பசியை நீக்கி, தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்பதில் நம் மனம் திரும்பினால், சமூகச் சிக்கல்களெல்லாம் நீங்கவா? அந்த நல்ல புத்தி நமக்கு எப்போது வருகிறதோ, அப்போதுதான் நம் வாழ்விலும் உண்மையான மறுமலர்ச்சி ஏற்படுவதாகும். அடிமூலம் தான் அந்த நல்ல புத்தி நமக்கு வரக்கூடுமாயின் ஓரளவு பலாத்காரமும் அவசியமாகும். உண்மையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்குத் தடை விதிக்க வேண்டுமென்ற தொனியிலேயே அமைந்திருந்தன. இந்தக் கோரிக்கையும் 'தி. மு. க.' 'நாம்தமிழர்' பூச்சாண்டியுடன் சம்பந்தப்படுத்தப்பட்ட தமிழ்த் திரைப்படங்கள் பற்றிய பிரசாரமும் தானே இந்தியாவிலிருந்து இங்கு இறக்குமதி செய்யப்படும் தமிழ்த் திரைப்படங்களில் மூன்று பிரதிகள் மட்டுமே எடுக்கலாம். என்று அரசாங்கம் கட்டுப்பாடு விதிக்கக் காரணமாக அமைந்திருக்கிறதோ என்னவோ!

தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேசி தமிழ்க் கலை, கலாச்சாரத்தைப் பேணுவதற்கு அவர்களுடைய உதவியையும் ஒத்துழைப்பையும் பெறுவதுதான் அரசியல் விவேகம். வகுப்புவாதம் ஓர் இடத்தில் தலைதூக்கினால் அதற்கு முடிவுகட்ட வழி காண வேண்டுமேதவிர அதற்குப் போட்டியாக வகுப்புவாதம் தலைதூக்க அனுமதிப்பது யாருக்கும் நன்மையல்ல.

## பாடசாலை விடுமுறை

அரசினர் பாடசாலை விடுமுறைத் திட்டம் வகுப்பவர்கள் ஒன்றில் அவர்களுக்கு பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளில்லாதவர்களாக இருக்க வேண்டும் அல்லது பிள்ளைகளைப்பற்றித் தெரியாத அல்லது அவர்களைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாதவர்களாக இருக்க வேண்டுமென்றும் இது பற்றித் தாம் எவருடனும் பந்தயம் கட்டத் தயாராக இருப்பதாகவும் தெகியோவத்தப் பிரதிநிதி திரு. தனபாலவீரசேகரா தெரிவித்திருக்கின்றார்.

பரீட்சைநடத்துவதற்கு இடவசதிக்காகவும் கல்வி இலாகாவின் வசதிக்காகவும் பாடசாலைகளின் விடுமுறைத்திட்டம் வகுக்கப்படுவதாயின் எங்கள்பிள்ளைகளை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். அவரது அரசியல் கொள்கைகளில் கருத்துவேறுபாடு இருந்தாலும் பிள்ளைகளின் விடுமுறை பற்றிய அவரது கருத்தை கல்வி அமைச்சர் நிராகரித்துவிடமுடியாது.

சென்ற டிசம்பர் மாதத்தில் நடைபெற்றிருக்க வேண்டிய ஜி. ஸி. ஈ. பரீட்சை எதிர்பாராத காரணத்தினால் ஒத்திவைக்க வேண்டி நேரிட்டதால் இப்பொழுது பரீட்சை நடைபெறவேண்டியுள்ளது. இந்தப் பரீட்சை மட்டுமல்ல வேறு பரீட்சைகளுக்கும் வேறு பல காரணங்களுக்காகவும் பாடசாலைகளில் இடம் தேவைப்படும்போது தவணை விடுமுறைகளை முன்னதாக அல்லது பின்னதாக மாற்றுவது கல்வி இலாகாவின் வழக்கமாக இருநதுவருகிறது. பாடசாலை நாட்கள் எத்தனை, விடுமுறைநாட்கள் எத்தனை என்றபுள்ளி விபரத்தில்தான் அந்த இலாகாவின் கவனமெல்லாமே தவிர, வெய்யில் காலம், மழைகாலம், பனிகாலம் என்பதைப்பற்றியோ பிள்ளைகளின் வளர்ச்சிக்வும் ஆரோக்கியத்துக்கும் ஓய்வு அந்தந்தக் காலத்துக்கேற்ப அவசியம் என்பதைப்பற்றியோ கவலையிருப்பதாக வோ தெரியவில்லை. இனியாவது கல்வியமைச்சர் இதில் கவனம் செலுத்தினால் நல்லதுதான்!

## இந்திரா பர்மா பயணம்

புதுடில்லி, மார்ச் 26

இந்தியப்பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி இன்றுபர்மா பயணமானார். மூன்று நாள் அங்கு தங்கியிருப்பார். பர்மா புரட்சிச் சபைத்தலைவர் ஜெனரல் நீவினுடன் இருநாட்டுக்கும் தொடர்பான பிரச்னைகள் குறித்துப் பேசுவார்.

## புத்தாண்டு விழா

கோப்பாய் வியா.

கோப்பாய் பொலிஸ் பகுதியில் வழமைபோல இவ்வருடமும் தேசிய தின விழாவை எதிர்வரும் புத்தாண்டுத் தினத்தன்று கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் கொண்டாடுவதற்கு ஒழுங்குகள் நடைபெற்றுவருவதாகத் தெரியவருகிறது.

இப்பத்திரிகை, ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 'தமிழரசு வரலாற்றில் புதிய கட்டம் உருவாகப்போகிறது'

## வல்வெட்டித்துறையில் அமிர்தலிங்கம்

வல்வெட்டித்துறை, வியா.

'எதிர்வரும் மகாநாட்டுடன் தமிழரசுக்கட்சியின் வரலாற்றுப் போக்கில் புதிய காலகட்டம் ஒன்று உருவாகப்போகிறது' பொதுச்செயலாளரும், வட்டுக்கோட்டை எம்.பி. யுமான திரு. அ. அமிர்தலிங்கம் இவ்வாறு கூறினார்.

வல்வெட்டித்துறையில் திரு. வி. வி. இராமசாமிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி கிளையின் செயற்குழுக் கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் உரைநிகழ்த்தினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

1949-ம் ஆண்டு இலங்கை தமிழரசுக்கட்சியின் வரலாறு ஆரம்பமானது. தமிழரசுக்கட்சியை அரும்பாடுபட்டு வளர்த்த காலகட்டமாக அது இருந்தது 1956-ம் ஆண்டு தொடக்கம் அரசாங்கத்துக்கு எதிரான உரிமைப் போராட்ட காலமாகவும், 1965-ம் ஆண்டு தொடக்கம் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் காலகட்டமாகவும்தமிழரசுகட்சியின் வரலாறு இருந்து வந்தது. எதிர்வரும் மகாநாட்டுடன் தமிழரசுக்கசிட் வரலாற்றில் புதிய காலகட்டம் ஒன்று ஆரம்பமாகப் போகிறது.

### பயங்கர சூழ்நிலை

''தமிழ் மக்களை எதிர்நோக்கி பயங்கரமான சூழ்நிலைகள் பல உருவாகிக் கொண்டிருக்கின்றன. தமிழ்பட இறக்குமதியை குறைப்பதன் மூலம் தமிழ் கலாச்சாரத்தை அழித்து தமிழ் கலாச்சார உறவை துண்டிப்பதன் மூலமும், லச்சல, சலுசல, ஜாதிக சம்பத, கியவச போன்ற சிங்களச் சொற்களை தமிழ் மொழி நடைமுறையில் புகுத்துவதன் மூலம் மொழியை அழித்து கலாச்சாரத்தை நசுக்கும் பயங்கரமான முயற்சிகள் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

கடந்த 4 ஆண்டுகளாக தமிழ் மொழி அரசாங்க விஷயங்களில் உரிய அந்தஸ்தை பெற்றுக் கொண்டு வருகிறது. நியாயமான தமிழ்மொழி உபயோகம் இன்று வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பூரணப்படுத்தப்பட்டு விட்டது. மற்றைய 7 மாகாணங்களிலும் பூர்த்தியாக்கப்படும் வரை நாம் ஓயமாட்டோம். ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைத் திட்டத்திலேயே அரசாங்க ஊழியர்கள் இரண்டு மொழிகளையும் தெரிந்திருத்தல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### பிரதேசம் முக்கியம்

மொழியுரிமையிலும் பார்க்க பிரதேச உரிமை முக்கியமானது. தேய்ந்துபோன மொழியை புத்துணர்ச்சி ஊட்டிவளர்த்துவிடலாம். ஆனால் இழந்து போன பிரதேசத்தை மீட்டதாக சரித்திரம் இல்லை. கல்ஓயா, கந்தளாய், அல்லை போன்ற இடங்களை டட்லி சேனநாயக்கா விவசாய மந்திரியாகவும், பிரதம மந்திரியாகவும் இருந்த பொழுது சிங்களக் குடியேற்றங்களாக மாற்றினார் இதற்கு அப்போதிருந்த தமிழ் தலைவர்களும் உடந்தையாக இருந்து வந்தார்கள். இதை உணர்ந்து தான் தாங்கள் 56-ம் ஆண்டு தொடக்கம் பிரதேசத்தைப் பறிபோக விடாது கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறோம். இதற்கு பண்டா-செல்வா ஒப்பந்தமே எடுத்துக்காட்டாகும். அரசாங்க ஊழியருக்கு சிங்கள பரீட்சை வகுப்பை அரசாங்கம் குறைத்த போதிலும், பரீட்சைத் திணைக்கள ஊழியர்களுக்கு சிங்களப் பரீட்சையில் தொல்லைகளைக் கொடுத்து வருகிறார்கள்.

### தென்னிலங்கையில் சமஷ்டி

இன்று தென்னிலங்கையில் சமஷ்டி கோரிக்கை குரல் ஒலிக்க ஆரம்பித்து விட்டது என்றோ ஒருநாள் இலங்கையில் சமஷ்டி ஆட்சி ஏற்படுவது தவிர்க்க முடியாது என்பது தெளிவாகிறது.

பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் பேசுகையில், 'தமிழரசுக் கட்சி எதிர்நோக்கும் புதிய போக்குக்கு உயிரும் உற்சாகமும் தரவேண்டிய பொறுப்பு இன்றைய இளைஞர் கையிலேயே தங்கியிருக்கிறது. எதிர்காலம் போராட்டகாலமாக அமைந்தால் வெற்றிக்கு வித்திட வேண்டியவர்கள் இளைஞர் என்பதை மறந்து விடக் கூடாது'' என்று கூறினார்.

## நல்லூர் வாலிபர் முயற்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண உதவி மேயரும் நல்லூர் வட்டார மாநகரசபை அங்கத்தவருமான திரு ஆ. துரைராஜசிங்கத்துக்கு இவ்வட்டார இளைஞர்கள் ஒரு மோட்டார் வாகனத்தை அன்பளிப்புச்செய்வதற்கான தீவிர முயற்சிலீடுபட்டுள்ளார்கள்.

இவர் வட்டாரத்துக்கான சேவைகளைத் துரிதமாகச் செய்வதற்கு வாகனமெதுவுமில்லாதிருப்பது தடையாகவும் இதனால் தாமதமேற்படுவதாகக் கருதப்படுவதாலேயே மோட்டர் வாகனமொன்றை விரைவில் அன்பளிப்புச் செய்ய வாலிபர்கள் முயற்சி மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

(ந, நி.(

## பாவற்குளப்பகுதி மக்கள் கஷ்டம்

வவனியா, வியாழன்

பாவற்குளப் பகுதியில் கடும்வரட்சி நிலவுகிறது. இதனால் விவசாயிகள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகி யிருக்கிறார்கள். குடிப்பதற்கு நல்ல தண்ணீர்பெறுவதே இங்கு கஷ்டமாக இருக்கிறது.

இங்கு கஷ்டமுறுபவர்களுக்கு நிவாரணம் வழங்க சமூகசேவைப்பகுதி ஒருலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது

## தவறிவிட்டது

செல்லத்துரை பிரேமச்சந்திரன், சுட்டிலக்கம் G.P. 73374. மானிப்பாய் வெஸ்லி தியேட்டருக்கும் நவாலி புளியடிச்சந்தைக்கும் இடையில் என்னுடைய G. C. E. (சாதாரணம்) பிரவேசப் பத்திரம் தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மானிப்பாய் பட்டின சபையில் ஒப்படைக்கவும்.

செ. பிரேமச்சந்திரன்

549

ளனர். வாசகர்களுக்காக வெளியில் வைக்கப்பட்டிருக்கும் புதினப்பத்திரிகைகள் தினமும் மாயமாக மறைந்து வருகின்றனவாம். இத்திருட்டைக் கண்டுபிடித்துத் தகவல் தருபவருக்குப் பரிசு வழங்கப்போவதாக நிலையச் செயலாளர் திரு. சி. தில்லை நடேசன் அறிவித்துள்ளார்.

0 0

### அதிருப்தி

நவிண்டில் பின்தங்கிய கிராமமாக இருப்பதாகவும் இக்கிராமத்தை அபிவிருத்தி செய்து முன்னேற்றவேண்டுமென்றும், உடுப்பிட்டிக் கிராமசபையும், அரசாங்கமும் நவிண்டில் முன்னேற்றத்தில் அசிரத்தை காட்டி வருவதாகவும் நவிண்டில் சனசமூக நிலையம் கண்டனம் தெரிவித்துள்ளது.

## பத்திராதிபராகத் தெரிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்ப மன்றத்தின் 'நுண்தொழில் இளைஞன்' சஞ்சிகையின் பத்திராதிபராக செல்வன் சபா. புஷ்பநாதன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவரை எதிர்த்து செல்வன் கா. பாலகிருஷ்ணன் போட்டியிட்டார்.

'மாணவர் வளர்ச்சிக்கு ஏற்ற நல்ல கருத்துக்களை அளிக்க முன்னின்று உழைப்பேன்' என்று புதிய பத்திராதிபர் நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார்.

## பெரிய வெள்ளி நிகழ்ச்சி

பண்டத்தரிப்பு, வெள்ளி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் ல் பெரிய வெள்ளியை முன்னிட்டு நடைபெறவிருக்கும் ஒரு மணி நிகழ்ச்சியில் இளவாலை செண். ஜேம்ஸ் பங்கைச் சேர்ந்த பிள்ளைகள் பங்குபற்றுகின்றனர். இவ்விசேஷ நிகழ்ச்சி சித்திரை மாதம் 4-ம் திகதி காலை நடைபெறவிருக்கிறது. வென்னப்புலவைச் சேர்ந்த வண. எப். ஜே அல்பிரட் சுவாமியார் இந்நிகழ்ச்சியை நடாத்தவிருக்கிறார். பாடல், நடிப்பு, பிரசங்கம் ஆகிய அம்சங்கள் இந்நிகழ்ச்சியில் சேர்க்கப்பட்டுள்ளன.

திதம் பாடியது மிக இனிமையாக இருந்தது. இலங்கையின் பல பகுதிகளிலும் இதற்கு அங்கத்தவர்களும் இருப்பதாயும், பல கிளைகள் ஏற்படுத்தி, அன்புத்தொண்டின் மூலம் மக்களிடையே ஒற்றுமையையும், நட்புறவையும் ஏற்படுத்தவும், இச்சங்கத்தார் கூட்டுறவாளரான அன்பர் செல்வரத்தினம் தலைமையில் அருந்தொண்டுசெய்கின்றனர்.

நமக்கு எப்போது வருகிறதோ, அப்போதுதான் நம் வாழ்விலும் உண்மையான மறுமலர்ச்சி ஏற்படுவதாகும். அடிமூலம் தான் அந்த நல்ல புத்தி நமக்கு வரக்கூடுமாயின் ஓரளவு பலாத்காரமும் அவசியமாகும். உண்மையான தெய்வநம்பிக்கை நமக்கு உறுதியாக ஏற்படும்போது தான், நம் வாழ்விலும் நல்ல மறுமலர்ச்சியும் மலர்வதாகும்.

# எக்ஸ்ரே கருவி வவனியா வருகிறது

வவனியா, வியாழன்

வவனியா ஆஸ்பத்திரியில் எக்ஸ்றேகருவியில்லாததால் எக்ஸ்றே படம் பிடிக்கப்படவேண்டிய நோயாளர்கள் யாழ்ப்பாணத்துக்கு வரவேண்டிய நிலை விரைவில் நீங்கவிருக்கிறது.

எஸ்றேகருவி விரைவில் வவனியா ஆஸ்பத்திரியை வந்தடையவிருக்கிறது.

இதற்கான நடவடிக்கை எடுத்ததற்காக வவனியா எம். பி. திரு. சிவசிதம்பரம் சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்காவுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

# கிருமிநாசினி சிதறிபறந்தது: சிறுவன் மரணம்

அளவெட்டி, வியாழன்

குளித்துக்கொண்டிருந்த சிறுவன்மீது கிருமிநாசினி சிதறிப்பறந்ததாம் மூர்ச்சையடைத்த சிறுவன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்குமரணமானான்.

கோண்டாவிலைச் சேர்ந்த ரஞ்சகுமார் ]12வயது[ என்ற சிறுவன் கிணற்றில் குளித்துக் கொண்டிருந்ததாகவும், அப்போது அங்கு தோட்டத்தில் கிருமிநாசினியைஒருவர் தெளித்துக் கொண்டிருந்ததாகவும் அது சிதறிப்பறந்து சிறுவன்மீது பட்டதாகவும், அதனால் மரணம் சம்பவித்ததாகவும் விசாரணையில் கூறப்பட்டுள்ளது.

# ஆசிரியர் இடமாற்றம் கல்வி வளர்ச்சியை தடுக்கும்

## என்கிறார் உப சபாநாயகர்

பருத்தித்துறை, வியா.

'மாதத்திற்கொருதடவை ஆசிரியரை இடமாற்றஞ் செய்வதால், எமது கல்வி வளர்ச்சிக்கு உலைவைப்பதாக முடியுமென்பதை கல்வி அமைச்சர் அறியாவிடினும் பகுத்தறிவும் உளநூலறிவும் கொண்டவர்கள் உணர முடியும். 38 ஆண்டுகள் தொடர்ந்து கடமைபுரிந்த திரு. பசுபதி மூன்று சந்ததியினரைப் படிப்பித்ததுடன் அவர்களுடைய ஏகோபித்த பாராட்டைப்பெற்றுள்ளார் என்பதற்கு இப்பாராட்டு விழா ஓர் எடுத்துக்காட்டாகும்'

இவ்வாறு புலோலி மெதடிஸ்த பாடசாலையில் 38 ஆண்டுகள் ஆசிரிய சேவை செய்த திரு. கி. பசுபதிக்கு எடுக்கப்பட்ட பாராட்டு விழாவில் உபசபாநாயகர் திரு மு. சிவசிதம்பரம் கூறினார். திரு. இ. கனகசபாபதி தலைமைதாங்கினார்.

ஆசிரியர் திரு. வ. இராசையா பேசுகையில், திரு. பசுபதி உயர்வாழ்வுவாழ்ந்து வருவதுமட்டுமன்றி, மற்றவர்களுக்கு உதாரணவாழ்வு வாழ்ந்தும் காட்டியவர் என்றும் பிறப்பின் நோக்கம் சேவையே என்றதாரக மந்திரத்துடனும் வாழ்ந்தவரெனக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org